பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 தை 08 திங்கட்கிழமை 21.01.2019 கதிர் 77

### இனிது ரகசியம் அல்ல!

அதிகாரத் தரப்புகளில் சகோதரச் சண்டை தவிர்க்க முடியாததாகத் தான் இருக்கும் போல.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் யார் என்பதில் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களிடையே இழுபறி தொடங்கிவிட்டது என்பது பரகசியம்.

மீண்டும் ஜனாதி பக்கம் 02

# கூட்டமைப்பை உடைக்கமாட்டேன்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் திட்டவட்ட அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் – உடைக்கும் நோக்கம் எனக்குக் கிடையாது. அவ்வாறு செய்யவேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.

இவ்வாறு உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், புதிதாக உருவாக்கிய தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது மத்திய குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் பக்கம் 02

## ‘ஏக்கிய ராஜ்ஜிய’ என்பது ஒற்றையாட்சியுள்ள நாடு

### அடித்துக் கூறுகின்றார் விக்கி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 21

’ஏக்கிய ராஜ்ஜிய’ என்பது ஒருமித்த நாடாக இருக்க முடியாது. ’ஏக்கிய ராஜ்ஜிய’ என்பது ஒற்றையாட்சியுடைய ஒரு நாடு. அதனை ஒருமித்த நாடு என்று சொல்வது மக்களை ஏமாற்றும் செய பக்கம் 11

## தமிழ்க் கூட்டமைப்புக்குள் பிளவா?

# நிபுணர் குழுவின் அறிக்கையை அடியோடு நிராகரித்தது ரெலோ

யாழ்ப்பாணம், ஜனவரி 21

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அடியோடு நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் ந.ஶ்ரீகாந்தா ஆகியோர் இணைந்து நேற்று ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளனர். பக்கம் 02

## இப்போது நாங்கள் பேசுவது சமஷ்டி அரசமைப்பு அல்ல!

### ஒரே நாட்டில் அதிகாரங்களைப் பகிரும் ஏற்பாடே வேண்டுமென்கிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜன. 21

எங்களுக்கு அதிகாரம் தேவையில்லை. மக்களுக்கு அந்த அதிகாரம் செல்லவேண்டும். இப்போது நாங்கள் பேசுவது சமஷ்டி அரசமைப்புமல்ல. ஒற்றையாட்சி அரசமைப்புமல்ல.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பக்கம் 11

## ரணிலை இயக்கும் சுமந்திரன் உத்தியோகபூர்வமற்ற பிரதமர்

### கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு,ஜன.21

இலங்கையில் உத்தியோகபூர்வமற்ற பிரதமராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இருந்து வருகிறார் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில பக்கம் 02

## மோடியை டில்லியில் சந்திக்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜன. 21

புதிய எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவைப் புதுடில்லிக்கு வருமாறு, இந்திய அரசு அதிகாரபூர்வமாக அழைப்பு பக்கம் 11

## முல்லைத்தீவு வரும் மைத்திரிக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டங்கள்!

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவுக்குஇன்று வரவுள்ளஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் கேப்பாபுலவு மக்கள் பக்கம் 11

## விக்னேஸ்வரனின் கட்சிக்கு நேற்று மத்திய குழு உறுப்பினர்கள் நியமனம்



யாழ்ப்பாணம், ஜன. 21

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது மத்திய குழுக் கூட்டம் நல்லூரில் உள்ள கட்சியின் செயலாளர் நாயகத்தின் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக் பக்கம் 11

## பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகின்றது நாடாளுமன்றம்!

### ‘அடிதடி’ அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன. 21

நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப் பக்கம் 11

## முன்னாள் போராளி ரி.ஐ.டியினரால் கைது

### பளையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 21

பளைப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதை அடுத்து அந்தப் பக்கம் 11

## மைத்திரிபால தலைமையில் இன்று வடக்கில் போதை ஒழிப்பு ஆரம்பம்

### முல்லைத்தீவு வித்தியானந்தாவில் நிகழ்வு

கொழும்பு, ஜன. 21

பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்டத்தின் பங்குதாரர்களாக மாற்றும் வகையில் தேசிய போதைப்பொருள் ஒழிப்புப் பக்கம் 11

## மோட்டார் குண்டுகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 21

வடமராட்சி கிழக்கு அம்பன் அம்பன் பகுதியில் விவசாயத் தேவைக்காக நீர் பெறுவதற்கு இயந்திரம் பக்கம் 11

## மூன்று மாகாண சபைகளை கலைக்க ஜனாதிபதி முடிவு!

### அமைச்சரவைப் பத்திரம் அடுத்த கூட்டத்தில் 9 மாகாணங்களுக்கும் ஒரே நாளில் தேர்தல்

கொழும்பு, ஜன. 21

மூன்று மாகாணசபைகளை கலைத்து ஒரே நாளில்அனைத்துமாகாண சபைகளுக்குமானதேர்தலை நடத்து பக்கம் 11

## சிறுபான்மையினரை இலக்குவைக்கும் பயங்கரவாதச் சட்டத்தை உடன் நீக்கு!

### யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்




யாழ்ப்பாணம், ஜன. 21

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர், வேம்படிச் சந்திக்கு அருகில் நேற்று பக்கம் 11

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கைத்தீவில் தேசியக் கேள்வியாக பல தசாப்தங்களாக நீடித்துக்கொண்டிருப்பதும், பொதுமக்கள், தமிழ்ப் போராளிகள் மற்றும் சிங்கள படை வீரர்கள் உட்பட இலட்சக்கணக்கான உயிர்களை பலி கொண்ட நீண்டதோர் யுத்தத்திற்கு வழிவகுத்ததுமான இனப்பிரச்சினைக்கு, இலங்கைத்தீவு ஒரே நாடு என்ற வரையறைக்குள் நீதியானதும், நிலைத்து நிற்கக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றினை, ஜனநாயக வழிமுறைகளுக்கு ஊடாக ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதில் நாம் இப்பொழுதும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இத்தகைய அரசியல் தீர்வு என்பது சுதந்திர இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனம் அனுபவித்திருக்கும் பாரபட்சம், அநீதி மற்றும் துன்ப துயரங்களுக்கு முடிவு கட்டும் விதத்தில், எமது மரபு வழித்தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பூரண சுயாட்சி உரிமை கொண்ட அரசியல் நிர்வாக ஏற்பாட்டை அமைப்பதாக இருக்கவேண்டும் என்பதிலும், இனப் பிரச்சினையின் அடித்தளமாக இருந்து வந்திருக்கும் ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக, சமஷ்டி ஆட்சி முறை என்று அழைக்கப்படும் இணைப்பாட்சி முறையில் அமையவேண்டும் என்பதிலும் எமது கட்சியும் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களின் ஆதரவையும் ஆணையையும் கடந்த தேர்தல்கள் பலவற்றில் தொடர்ந்து பெற்று வந்திருக்கின்றது.

எமது மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளிலிருந்து நாம் ஒரு போதும் பின்வாங்க முடியாது.

இந்த அரசியல் பின்னணியில், இப்பொழுது முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையைக் கவனமாகவும் நிதானமாகவும் ஆராய்ந்து பார்க்கையில், அதனை நிராகரிப்பதைத் தவிர வேறு தெரிவு எதுவும் எமக்கு இல்லை என்பதை நாம் திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டியுள்ளது.

இந்த நிபுணர் குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒற்றையாட்சி முறை தொடர்ந்து நீடிப்பதற்கு மிகச் சாதுரியமாக பிரேரிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், பௌத்த மதத்திற்கு இப்போதுள்ள அரசியல் சாசனத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அரசமதம் என்னும் சட்ட அந்தஸ்த்து தொடர்ந்து பாதுகாக்கப்படுவதற்கும் வழி அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாட்டின் ஏனைய மதங்கள் தொடர்ந்தும் அநாதை மதங்கள் போல கணிக்கப்படுவதற்கும், நடாத்தப்படுவதற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், அதிகாரப் பங்கீடு விடயத்தில், அதனை விஸ்தரித்து, வலுப்படுத்தி முழுமைப்படுத்துவதற்கு பதிலாக, அரைகுறையான அதிகாரங்களை மாத்திரமே மாகாண சபைகளுக்கு வழங்கியிருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் ஆக்கபூர்வமாக எந்தவொரு முன்னேற்றகரமான யோசனையும் காணப்படவில்லை.

அதே நேரத்தில் அரச காணிகள் விடயத்தில், நிலப்பங்கீடுகள் வழங்குவதில் பாரிய சிங்களக் குடியேற்றங்களுக்கு அடிகோலியுள்ள மகாவலி அபிவிருத்தித் திட்டம் உட்பட இப்போது செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இப்போதைய நடைமுறைகளே தொடர்ந்தும் பின்பற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழினத்தின் தாயகம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தொடர்ந்து சூறையாடப்படுவதை இது உறுதிப்படுத்தும்.

அத்துடன், சட்டமன்றத்தின் இரண்டாவது சபையாக பிரேரிக்கப்பட்டிருக்கும் யோசனையின்படி, மாகாணசபைகள் மூலம் பிரதிநிதிகள் அச்சபைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பதிலாக, மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்தே அத்தெரிவு இடம்பெறுவது என்பது, மாகாணசபைகளின் சுயாதீனத்தை கேள்விக்குரியதாக மாற்றுவதோடு, ஒற்றையாட்சி முறைக்கு வலுவூட்டுவதுமாகவே அமையும்.

எமக்கு அருகில் உள்ள இந்திய நாட்டின் நாடாளுமன்றத்தின் மேல்சபையான ராஜ்யசபா என்று அழைக்கப்படும் மாநிலங்கள் அவையை மாதிரியாகக் கொண்டு, இந்த யோசனை தயாரிக்கப்படாதது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றே கருதவேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான இணைந்த வடகிழக்கு மாநிலம் என்பது வெறும் அரசியல் கனவாகவே நீடிக்கக்கூடிய விதத்தில், அருகருகாக அமைந்திருக்கும் இரண்டு அல்லது மூன்று மாகாணங்களின் இணைப்புப் பற்றிய பிரேரணை அமைந்திருக்கிறது என்பதனையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இந்த விவகாரத்தில் இப்போதுள்ள அரசியல் சாசன ஏற்பாட்டிற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட மாகாணங்களில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்ற விடயமும் புதிதாக புகுத்தப்பட்டுள்ளது.

சிங்களக் குடியேற்றத்தால் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து தொடர்ந்து தனிமைப்படுத்தி வைப்பதற்கு ஏதுவாக இந்தச் சர்வஜன வாக்கெடுப்பு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

சுருக்கமாகச் சொல்வதானால், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாகைளைத் தொடர்ந்து நிராகரித்து, சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் அரசியல் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் விதத்தில், இந்தத் தீர்வுத் திட்ட அறிக்கை அமைந்துள்ளது என்பதனை நாம் திட்டவட்டமாகவும் தெட்டத்தெளிவாகவும் தெரிவிக்கத் தவறினால் எமது மக்களுக்கு துரோகம் செய்தவர்களாகி விடுவோம்.

எமது தாயகத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து, கடந்த முப்பத்தியொரு ஆண்டுகளாக தொடர்ந்து செயற்பட்டு வந்திருக்கும் எமது அமைப்பு, எமது மக்களின் தேசிய அபிலாகைளை நிறைவேற்றி வைக்கக்கூடிய நீதியான அரசியல் தீர்வுக்காக தொடர்ந்தும் பாடுபடும் – என்றுள்ளது. (ஐ)

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். ஹொரணையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னால் இருந்து சுமந்திரனே இயக்குகின்றார். அவர் கூறுவதைப் பிரதமர் செயற்படுத்தி வருகிறார்.

நண்பர்களுடனான நட்பு காரணமாகச் சுமந்திரன் ஊடகங்கள் இருப்பதை மறந்துவிட்டு நான் அவற்றைச் செய்கிறேன் என்று வடக்குக்குச் சென்று கூறுகிறார். அரசு தமது கைகளில் இருப்பதாகவும் எந்த நேரத்திலும் அரசைக் கவிழ்க்கமுடியும் எனவும் சுமந்திரன் கூறியுள்ளார்.

இதனால், அரசின் ஊடாக சமஷ்டிக்கும் அப்பால் சென்ற அதிகாரங்களைக் கொண்ட அரசமைப்புச் சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

இலங்கையின் உண்மையான தலைவர் சுமந்திரன் என்பதை இதற்கு முன்னரும் நான் கூறினேன். தற்போது அவரே தனது வாயால் அதனை கூறியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் – என்றார். (ஐ)

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒரு கட்சி தொடங்குவதாக ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இவ்வாறு அறிவிக்கப்பட்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. இந்தக் கால கட்டங்களில் எங்கள் கட்சியின் யாப்பைத் தயாரித்திருந்தோம். அவற்றில் யார் யாருக்கு எந்தெந்தப் பொறுப்புக்கள் கொடுக்கப்படவேண்டுமென அடையாளப்படுத்தி இருக்கின்றோம். இவ்வாறு பலவிதமான செயல்களில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். மத்திய குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இதில் 90 சதவீதமானவர்களை அடையாம் கண்டுள்ளோம். இன்னும் சில பதவிகளுக்குச் சிலருடன் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களையும் உள்வ ாங்க இருக்கின்றோம். இன்று அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் பிரதிநிதிகள் வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் குழுக் கூட்டம் முழுமையான கூட்டமாக அமைந்தது. இவர்கள் தங்கள் வட்டாரங்கள், தொகுதிகள், மாவட்டங்களில் மக்களோடு மக்களாகத் தொடர்புபட்டு கட்சியின் கொள்கைகளைப் பரப்பும் அவசியம் இருக்கிறது. அதனை அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

கட்சி அரசியல் யாப்பில் முக்கியமாக கீழிலிருந்து மேல்வாரியாகத் தான் தெரிவுகள் நியமனங்கள் அமைத்துள்ளோம். இதுவரை கட்சித் தலைவர், செயலாளர் என்று செயற்பட்டு வந்ததோம். அந்த நிலையை மாற்றிச் செயலாளர் தலைவராகவும், அவருக்கு அனுசரணையாக ஒவ்வொரு விடயங்கள் சம்பந்தமாகவும் இணைச்செயலாளர்களை அடையாளப்படுத்தி நியமித்துள்ளோம். அதனை விட நிர்வாகக் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அந்தத்த தொகுதிகளுக்குச் சென்று வட்டார ரீதியாக மக்களை ஒன்றிணைந்து செயற்படும் விதத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்று பத்திரிகை ஒன்று, எங்கள் கட்சியில் ஜனநாயகம் இருக்குமா என்றெல்லாம் கேள்வி கேட்டுள்ளது. ஆனால் ஜனநாயகம் கட்டாயம் இருக்கும். தொடக்கத்திலேயே சில நேரத்தில் தலைவர் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனடிப்படையில் நான் தான் அடையாளம் கண்டு நடவடிக்கை எடுத்துள்ளேன். அடுத்த வருடம் தொடக்கம் கீழிருந்து அடையாளப்படுத்தி அவர்கள் மேல் வருவார்கள்.

அப்போது என்னைக்கூட வேண்டாம் என்று சொன்னால் நான் வெளியில் போவேன். ஜனநாயகம் என்பது கட்டாயமாகக் கட்சியினால் பாதுகாக்கப்படும். அந்த அடிப்படையில் தான் எங்களுடைய எங்கள் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இன்று சில திருத்தங்களுடன் யாப்பைச் சகலரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவைகள் தொடர்பில் பெருமளவான ஊடகச் சந்திப்பைச் செய்யவேண்டுமென்ற எண்ணமும் உள்ளது. அதற்கமைய முழுமையான ஊடகச் சந்திப்பைக் கட்சி சார்பில் விரைவில் நடத்தவுள்ளோம் – என்றார்.

கேள்வி – தமிழ் மக்கள் கூட்டணியில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்களை உங்கள் மத்திய குழுக் கூட்டத்தில் காணவில்லையே?

பதில் – நாங்கள் கொள்கை ரீதியாகச் செல்பவர்கள். எங்களது கொள்கைகளை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். அந்தக் கொள்கை அடிப்படையில் எங்களுடன் சேர வருபவர்களை நாங்கள் பார்த்து அடையாளப்படுத்தி ஏற்றுக் கொள்வோம். அவர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்றோ அல்லது முன்னர் பதவியில் அவர்கள் இருந்தார்கள் என்பதால் எங்களோடு சேர்க்கவேண்டுமென்றோ அவசியம் இல்லை.

எமக்குத் தெரியாதவர்களாக இருந்தால்கூட கொள்கையிலே மிக உறுதியாக ஈடுபாடு உடையவர்களாக இருந்தால் அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்த் தயாராக உள்ளோம். அவ்வாறானவர்களைத் தான் நாங்கள் சேர்த்துக் கொண்டும் இருக்கின்றோம். அதாவது கொள்கையில் ஈடுபாடு, மக்கள் நலனில் ஈடுபாடு, நம்பிக்கையோடு நடந்துகொள்ளக் கூடியவர்கள் என்ற முறையில் நாங்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஆகவே மற்றவர்கள் எங்களுடன் இணைய வேண்டுமென்றால் அவர்கள் எங்களோடு வந்து எந்த நேரத்திலும் இணையலாம்.

கேள்வி – குறிப்பாக முன்னாள் அமைச்சர்களான அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் ஆகியோர் இணைந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் அவர்கள் வரவில்லையே?

பதில் – எங்கள் கட்சியோடு சேர்ந்து செயற்படுவார்கள் என்று அவர்களை நாங்களும் எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் தங்கள் கட்சிகளுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள் போல் தெரிகிறது. அதாவது அவர்களது கட்சி எங்கள் கட்சியுடன் தேர்தல் சம்பந்தமாக இணைந்து நடவடிக்கை எடுக்கலாமென அவர்கள் இருவருமே கடந்த வாரம் எம்மிடம் சொல்லியுள்ளனர். அதிலே எங்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஆகவே அவர்கள் இன்று வராதமைக்குக் காரணம் எங்களது கட்சியில் உள்சேர்ந்து நடந்து கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லை. தங்கள் கட்சியையும் வைத்துக் கொண்டு எங்களது கட்சியுடன் இணைந்து ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படுவதுதான் அவர்களுக்கு பிடித்தமாக இருக்கிறது. அதனால் அவர்களை அழைக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

கேள்வி – தமிழ் மக்கள் பேரவை உங்களது கட்சி தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

புதில் – எங்களுக்கும் தமிழ் மக்கள் பேரவையில் இருப்பவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் இல்லை தேர்தல் கொள்கையிலே நாங்கள் எல்லோரும் ஒரே கொள்கையிலே தான் பய ணிக்கின்றோம். அந்த வகையில் அவர்கள் எங்களோடு சேர்ந்து தான் செல்கின்றார்கள் பேரவையில் இருக்கும் பலர் எங்களது கட்சியின் ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றுள்ளார்கள். மக்களோடு மக்களாக இருக்கும் பொது ஸ்தாபனங்களில் இருப்பவர்களை நாங்கள் ஆலோசனைக் குழுவில் இணைத்துள்ளோம். அந்தக் குழுவில் இருப்பவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியாது.

**(மிகுதி நாளை வரும்)**

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்பதால், அத்தேர்தலில் குதிக்கத் தாங்கள் தயார் என அவரின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஷவும், இளைய சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவும் ஏற்கனவே அறிவித்து விட்டனர். மற்றைய சகோதரரான பஸில் ராஜபக்ஷ தனது விருப்பத்தைப் பகிரங்கமாக அறிவிக்காவிடினும் அதற்கான காய்நகர்த்தல்களை ஆரம்பித்துவிட்டார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அரசியல் சாணக்கியரான அவர், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் களத்துக்கான போட்டியில் 'லேட்'டாகக் குதித்தாலும் 'லேட்டஸ்ட்'டாக இருப்பார் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

இந்தச் சகோதரப் போட்டிகளில் தீர்ப்புக் கூறும் உரிமை – பொறுப்பு – மற்றைய சகோதரரான மஹிந்த ராஜபக்ஷவின் களத்திலேயே உள்ளது. இந்த விடயத்தில் பந்தை அவர் எப்படி விளையாடப் போகின்றார் என்பதை முழுநாடும் பார்த்திருக்கின்றது.

இந்த மூன்று பேரில் தெற்கில் மக்கள் மத்தியில் செல்வாக்கு உடையவராகத் திகழ்பவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷதான். ஆனால் அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவதில் மஹிந்தவுக்கு அதிகம் உடன்பாடு இல்லை எனத் தெரிகின்றது.

சிறுபான்மையினர் – குறிப்பாகத் தமிழர்களும், முஸ்லிம்களும் – கோட்டாபயவை எதிர்க்கின்றனர் என்ற யதார்த்தம் மஹிந்தவுக்குத் தெரியும். அதனால் அவரைத் தவிர்க்கும் வழிவகைகளை மஹிந்தர் நாடுகின்றார். ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வேட்பாளராவதாயின் தமது இரட்டைப் பிரஜாவுரிமையில் ஒன்றான அமெரிக்கப் பிரஜாவுரிமை துறக்க வேண்டும். அமெரிக்க மூலம் அந்தப் பிரஜாவுரிமையை கோட்டாபய துறப்பதற்கு இடமளிக்காமல் முட்டுக்கட்டை போடுவதன் மூலம் மஹிந்தர் காய் நகர்த்துவார் எனத் தெரிகின்றது.

இந்த வேட்பாளர் பதவிக்குத் தாம் நிறுத்தக்கூடிய ஒருவர், தாம் நாட்டின் பிரதமர் நிலைக்கு மீள வந்ததும், ஜனாதிபதிப் பதவியைத் துறந்து, அதனைத் தமக்கு வழங்கக்கூடியவராக இருக்க வேண்டும் என மஹிந்தர் எதிர்பார்க்கின்றாராம்.

ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர், அப்படி அந்தப் பதவியைத் தனக்கு விட்டுக் கொடுக்கக் கூடியவரல்லர் கோட்டாபய என்பது மஹிந்தருக்குத் தெரியும். அதனால் உத்தேச வேட்பாளர் பட்டியலில் இருந்து அவரின் பெயர் வெட்டப்பட்டுவிட்டது.

அடுத்தவர் பஸில் ராஜபக்ஷ. அவர் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றினால், தமக்குப் பின்னர் கட்சியினதும் அதிகாரத்தினதும் தலைமைச் செல்வாக்கை தனது மகன் நாமலிடம் விட்டுக் கொடுக்கவோ பஸில் முன்வரமாட்டார் என்பது மஹிந்தருக்குப் புரியும். அதனால் அவரின் பெயரும் உத்தேச வேட்பாளர் பட்டியலில் இருந்து வெட்டப்பட்டுவிட்டது.

மூன்றாவது பிரமுகர் சமல் ராஜபக்ஷ. முழு நாட்டினதும் மக்களின் ஆதரவைப் பெற்ற கவர்ச்சியான தலைவர் அவர் அல்லர் என்ற கருத்து மஹிந்தருக்கு உண்டு. அதனால் அவர் பெயரும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுவிட்டது என்கின்றனர் கொழும்புச் செய்தியாளர்.

இந்தச் சிக்கலைத் தாண்டுதற்கு மஹிந்தர் பிறிதொரு திட்டம் வைத்திருக்கினறார் என அவரைச் சூழவுள்ள வட்டாரங்கள் கருதுகின்றன. அது கடைசி நேரத்தில்தான் கட்டவிழும் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

இப்போதைக்கு ஐ.தே.கட்சி தனது வேட்பாளர் யார் என்று அறிவிக்கட்டும், அதற்குப் பின்னர் எங்கள் தரப்பு வேட்பாளர் யார் என்பதை அறிவிப்போம் என்று தெரிவித்து விடயத்தைத் தள்ளிப் போட்டிருக்கின்றார் மஹிந்தர்.

இந்த விவகாரத்தில் தமது கருத்து நிலைப்பாடு இதுதான் என்று வெளிப்படுத்தாமல் He is playing his cards very close to his chest.

சகோதர சர்ச்சை மஹிந்தருக்கு மட்டும் என்றல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் உண்டு. அதைப் பிறிதொரு நாள் இப்பத்தியில் பார்ப்போமா?

-மின்னல்-

# ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரப் பகிர்வு பிரதமர் ரணில் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரப்பகிர்வு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசமைப்பு வந்துவிட்டது, நாடு பிளவுபடப் போகின்றது என்றெல்லாம் சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், புதிய அரசமைப்பு இன்னும் இயற்றப்படவில்லை. ஏன்! சட்டமூலம்கூடத் தயாரிக்கப்படவில்லை.

சட்டமூலம் தயாரிக்கப்பட வேண்டும் என்றால் அரசமைப்பு நிர்ணயச் சபையில் அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியம். அது கிடைக்குமா அல்லது இல்லையா என்பது தெரியவில்லை. கட்சித் தலைவர்கள்தான் அதை தீர்மானிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தமிழ்மொழியில் வாழ்த்து தெரிவித்து உரையாற்றினார். அதுசிறப்பான செயல்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்



கூடிய அரசமைப்பு முன்வைக்கப்பட வேண்டும் என மஹிந்த குறிப்பிட்டிருந்தார். நாமும் அதே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றோம். நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலான யோசனைகளை ஒருபோதும் முன்வைக்கமாட்டோம்.

என்னுள் எவ்வித மாற்றமும் இல்லையெனச் சிலர் விமர்சிக்கின்றனர். அன்று முதல் இன்றுவரை ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் என நம்புகின்றேன். அதேபோல் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவோம்-என்றார். (ஐ)

# தேர்தலை இழுத்தடிக்கும் உத்தியே புதிய அரசமைப்பு எனும் பிரேரணை

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,ஜன.21

புதிய அரசமைப்பு எனும் பிரேரணை தேர்தலை இழுத்தடிப்புச் செய்வதற்கான அரசாங்கத்தின் ஓர் உத்தியே என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தால், அதனைத் தோற்கடிக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். ஐக்கிய தேசியக் கட்சியிலும் இந்த புதிய அரசமைப்



புக்கு எதிரான பின் ஆசன எம்.பிக்கள் உள்ளனர். அவர்களுடன் பேச்சு நடத்த தயாராகவுள்ளோம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஞானசாரதேரர் கூறிய முன்னறிவிப்புக்கள் தற்போது நடைபெற்று வருகின்றனவாம்

## சிங்கள ராவய அமைப்பு கூறுகிறது

கொழும்பு,ஜன.21

நாட்டில் ஞானசார தேரர் கூறிய முன்னறிவிப்புக்கள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன என சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

சிலைகள் உடைக்கப்படுகின்றன. புத்தளம், வனாத்திவில்லு பிரதேசத்தில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் ஞானசார தேரர் கூறிய உண்மைகள் எனவும் தேரர் குறிப்பிட்டார்.

ஞானசார தேரரை எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர தின கைதிகள் விடுதலை செய்யும் பட்டியலில் சேர்க்குமாறு கோரி நேற்றுமுன்தினம் தேரர்களினால் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

# ஞானசாரதேரருக்கு விடுதலை துமிந்த திஸாநாயக்க நம்பிக்கை

கொழும்பு,ஜன.21

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர், பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி, ஜனாதிபதியால் விடுதலை செய்யப்படுவார் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பி துமிந்த திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள தேரரை, சந்தித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேரரின் விடுதலை குறித்து, ஜனாதிபதியுடன் உரையாடியுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

நாட்டு மக்களுக்காகவும் சிங்கள பௌத்தர்களுக்காகவும், பௌத்த மதத்



தைப் பாதுகாப்பதற்காகவும் என்று, அவர் செய்த சேவைகளைக் கருத்தில் கொண்டு, சுதந்திர தினத்தன்று, அவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பளை கரந்தாயில் ஆயுதங்களுடன் இளைஞன் கைது

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சி இளைஞன் ஒருவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பளை, கரந்தாய் பகுதியிலுள்ள வீடொன்றில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனப் பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அவ்வீட்டினை அவர்கள் சோதனையிட்டனர்.

இதன்போது, ஒரு தொகுதி ஆயுதங்களை அவர்கள் மீட்டதுடன் வீட்டிலிருந்த இளைஞனை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறுசம்பவத்தில்கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் மேலதிக விசாரணையை மேற்கொள்வதற்காக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்:

# குற்றப் பத்திரிகை தாக்கல் திட்டமிட்டு இழுத்தடிப்பு?

கொழும்பு,ஜன.21

2008ஆம் ஆண்டு 11 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் கடற்படை அதிகாரிகள் சிலருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இந்த விசாரணைகள் முடிந்த பின்னர் சந்தேக நபர்கள் மீதான குற்றப் பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

எனினும், இந்த இறுதிக் கட்டப் பணிகள் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருவதுடன் இதன் பின்னணியில் அரசியல் சக்தியொன்று இருப்பதாக தெரிய வருகிறது.

கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மீது குற்றஞ்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதுகுறித்து 2009ஆம் ஆண்டு



முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டே இளைஞர்கள் கடத்தப்பட்டனர் என பதிவிடப்பட்டுள்ளது. அந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னர் இருந்தேகுறித்தகப்பம்பெறும்குழுவினர் பற்றி வசந்த கரன்னாகொட அறிந்திருந்தார் எனவும், எனினும், அவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

இதனை மையப்படுத்தியும் வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது. இதனாலேயே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதை அரசியல் பின்னணியுடன் இழுத்தடிக்க அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன எனத் தெரியவருகிறது.

# கல்வி, சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

கொழும்பு,ஜன.21

இவ்வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தில் கூடுதலான நிதி கல்விமற்றும்சுகாதாரத்துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கல்வித்துறைக்காக 635 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. சுகாதாரத்துறைக்காக 690 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் சுகாதாரம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும், கல்வித்துறையை கட்டியெழுப்புவதற்காகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாணத் தேர்தல் கானல் நீரே!

மாகாண சபைத் தேர்தல்களை இன்னும் மூன்று, நான்கு மாதங்கள் கழித்து – பெரும்பாலும் அடுத்த மே மாதத்தில் – நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என நேற்று முன்தினம் செய்திகள் வெளியான போதிலும் அரச உயர் வட்டாரங்கள் சில அது குறித்து சந்தேகம் வெளியிடத் தவறவில்லை.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு உண்மையில் அதிக ஈடுபாடு இல்லை எனவும் –

ஆனாலும், தேர்தல் நடத்தப்படாமல் இழுபடுகின்றமைக்குக் காரணம் தான் அல்ல என்று வெளிக்காட்டியபடி விடயத்தை நடத்தாமல் பிற்போட வைப்பதிலேயே அதன் முழுக் கவனமும் உள்ளது எனவும் –

அரச உயர்வட்டாரங்களுடன் நெருங்கிப் பழகும் சுயாதீனச் செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த விடயத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை இரட்டை வேடம் போடுவதாகவும், அதனால் மாகாணத் தேர்தல் நடைபெறும், நடத்தப்படும் என வெளியில் ஆரவாரம் காட்டப்பட்டாலும் உள்ளூற அதை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கே தந்திரமாகக் காய்கள் நகர்த்தப்படுகின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை, வடமேற்கு மாகாண சபை, வடமத்திய மாகாண சபை, மத்திய மாகாண சபை, சப்பிரகமுவ மாகாண சபை ஆகிய ஆறின் பதவிக் காலம் ஏற்கனவே முடிவடைந்து விட்டது. எந்த நேரத்திலும் அவற்றுக்கான தேர்தலை நடத்த முடியும்.

மேல் மாகாணசபை, தென் மாகாண சபை ஆகியவற்றின் பதவிக் காலம் ஏப்ரலில்தான் முடிவடையும். அதற்கு இன்னும் மூன்று மாதங்கள் உள்ளன.

அவற்றின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், தேர்தலை அறிவித்து, வேட்பு மனுக்களைக் கோரி, தேர்தலை நடத்துவதாயின், மேலும் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

அது போலவே, ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் ஒக்ரோபரில்தான் முடிவடைகின்றது. அதன் பதவிக்காலம் பூர்த்தியான பின்னர் அந்த மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தவதாயின் அது இந்த ஆண்டு முடிவடைந்த பின்னர்தான் – அடுத்த ஜனவரியில்தான் – சாத்தியமாகும்.

இப்போது மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அது குட்டிப் பொதுத் தேர்தலாக – தேசிய மட்டத்திலான தேர்தல் ஒன்றுக்கான ஒத்திகையாக – மக்களின் கருத்தை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான – கருவியாகவும் வாய்ப்பாகவும் அது அமைந்து விடும் என்பது வெளிப்படையானது.

அண்மித்து வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கு முன்னர், அத்தகைய ஒரு தேசிய மட்டத்திலான ஒத்திகையை நடத்தும் அளவிற்கு 'றிஸ்க்' எடுக்க ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை என அக்கட்சித் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் அடித்துக் கூறுகின்றன.

மீண்டும் வளர்ந்து வரும் – தெற்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் – மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு விற்றமின் ஊக்குவிப்பு தருவது போல உத்தேச மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அமையுமானால், இனி நடக்கக் கூடிய ஜனாதிபதித் தேர்தலிலும் அதைத் தொடரும் பொதுத் தேர்தலிலும் தலையே தூக்க முடியாத நிலைமை தனக்கு ஏற்படும் என்பது ஐ.தே.க. தலைமைக்கு நன்கு தெரியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கை அரசியலையே நிர்ணயிக்கும் பதவி நிலையாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி உள்ளது. அது ஐக்கிய தேசியக் கட்சியின் கையை விட்டுப் போய் சுமார் கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. இந்த இருபத்தியைந்து வருடங்களில் அக்கட்சி அரசில் இருந்தது கூட ஐந்து, ஆறு ஆண்டுகள்தாம்.

இந்தச் சூழலில் இன்னொரு தடவை – திரும்பவும் – ஜனாதிபதிப் பதவியும், அரசுப் பொறுப்பும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிட்டாமல் போனால், அக் கட்சி இன்னும் ஓரிரு தசாப்தங்களுக்குத் தலை தூக்க முடியாமல் போகும் என்ற யதார்த்தத்தை அக்கட்சியின் தலைமை மிகுந்த கவலையுடன் பரிசீலிப்பதாகத் தெரிகின்றது.

அதனால், எப்பாடு பட்டேனும் – எதைச் செய்தாகிலும் – இந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் வெற்றி பெற்று விட வேண்டும் என்று துடிப்பாய்த் துடிக்கும் அக்கட்சி, அதனால், அதற்கு இடையூறாக – இடைஞ்சலாக – வரக் கூடிய மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் எட்டி உதைத்து, நெட்டித் தள்ளி விடவே விரும்புகின்றது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உத்தேச மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பான இணக்கம் பிரதான கட்சிகளிடையே இல்லை என்பதைக் காரணம் காட்டி இந்தத் தேர்தலை இழுத்தடித்து வந்தது ஐ.தே.க. அரசு. ஆனால், முன்னர் இருந்த பழைய முறைப்படி – விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தெரிவு முறையின் கீழ் – மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என்று அதிரடி அறிவிப்பு வெளியிட்டு அவ்விடயத்தில் இணக்க நிலை வந்து விட்டதாக வெளிப்படுத்தியது சுதந்திரக் கட்சி.

இதனால், புதிய சிக்கல் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் இந்தத் தேர்தலை பிற்போடும் நாடகத்தை தொடர ஐ.தே.க. அரசு தயாராகி விட்டது எனக் கூறப்படுகின்றது.

இப்போது பதவியில் இருக்கும் மேற்கு மற்றும் தென் மாகாண சபைகளின் பதவிக் காலம் ஏப்ரல் 22 இலும், ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் ஒக்ரோபர் 9 ஆம் திகதியுமே முடிவடையும். இந்த மூன்றிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே ஆட்சியில் இருக்கின்றது.

நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற சர்ச்சையைக் கிளப்பினால் இந்த மூன்று சபைகளினதும் பதவிக் காலத்தை முற்கூட்டியே முடித்து, வெட்டிக் குறைப்பதற்கு சு.க. இணங்க வேண்டும். அதாவது, மூன்று சபைகளிலும் தனது பதவிக் காலத்தைக் கணிசமாக இழக்க அது சம்மதிக்க வேண்டும். அல்லது சு.க. தானும் குழம்பி, தேர்தலுக்கான இணக்கச் சூழலையும் குழப்பும். அந்தக் குழப்பத்தில் மாகாணத் தேர்தலை நடத்தாமல் விடயத்தைத் தள்ளிப்போடலாம் என ஐ.தே.க எதிர்பார்க்கின்றது

பழைய விகிதாசாரத் தேர்தல் முறைமைக்குத் தான் சம்மதம் என்று சு.க. அறிவித்த சூழலில், இப்படி நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் மாகாண சபைத் தேர்தல் என்ற அறிவிப்பை வெளியிட்டு, அதன் மூலம் மீண்டும் சு.கவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி, தேர்தலுக்கான இணக்கச் சூழ்நிலை பிரதான கட்சிகள் இடையே வந்து விடாமல் குழப்பம் பண்ணிப் பார்த்துக் கொள்ளும் தந்திரத்தில் ஐ.தே.க. தலைமை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதுதான், நிலைமை என்றால் மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு நடக்காது. அது தொடர்ந்தும் கானல் நீராகவே எட்டாமல் இருக்கும்.

# புதிய அரசமைப்பு வரும் சாத்தியம் அருகி விட்டது

## — மனோவும் 'பல்டி' —



கொழும்பு, ஜன. 21

இப்போது புதிய அரசமைப்பு வரும் சாத்தியம் அருகி விட்டது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி – ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கு எதிர்ப்பு மஹிந்த அணியில் திட்டமிட்ட இனவாத நோக்குகளில் முன்னெடுக்கப்படுகின்றது. அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளேயும் இந்த எதிர்ப்பு வலுக்கின்றது. இதற்கு அவர்கள் காலம் கடந்து விட்டது, இது தேர்தல் ஆண்டு என்ற காரணங்களைக் காட்டுகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில் –

புதிய அரசமைப்பு அமைக்கும் பணியை தொடங்கிய ஆரம்பத்தில் வழிநடத்தல் குழு, ஜனாதிபதி முறை ஒழிப்பு, தேர்தல் முறை மாற்றம், அரசியல் தீர்வு ஆகிய மூன்று பிரதான இலக்குகளை தீர்மானித்தது. காலப்போக்கில் முதலிரண்டை மட்டும் தீவிரமாக செய்ய முயன்று, அரசியல் தீர்வை தள்ளி வைக்க முயன்றார்கள்.

ஜே.வி.பியைத் திருப்திபடுத்த முதலாவது இலக்கான நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு என்பதை நோக்கி வழிநடத்தல் குழு வேகமாக நகர்ந்தது. பிறகு எல்லா பெரும்பான்மை கட்சிகளும் சேர்ந்து தேர்தல் முறையை மாற்றி தொகுதி முறைமையை கொண்டுவந்து, தென்னிலங்கையில் பரந்து வாழும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை தீர்த்துக் கட்டுவது என கங்கணம் கட்டிக்கொண்டு வழிநடத்தல் குழுவில் செயற்பட்டன.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு கட்டத்தில் பெரும்பான்மை கட்சிகளுடன் உடன்பட்டது. பின்னர் ஏனைய சிறுபான்மை கட்சிகளான தமிழ் முற்போக்குக்கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வலியுறுத்தல் காரணமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் மாற்றிக்கொண்டது.

தகிடுதத்தம் செய்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய தேர்தல் முறையைக் கொண்டு வந்தார்கள். இதைப் பெரும்பான்மை கட்சிகள் எம்மீது நிர்ப்பந்தம் செலுத்தி அரசமைப்பு பணிக்கு வெளியில் செய்தார்கள். பின்னர் இதை அப்படியே மாகாண சபைத் தேர்தல் முறைக்கும் கொண்டுவந்து, வழிநடத்தல் குழுவுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் வரைக்கும் கொண்டு வந்து சிறுபான்மை மக்களை முழுதாக முடிக்க முயன்றார்கள்.

மாகாண சபைத் தேர்தல் சட்டம் கொண்டு வந்த போது அதற்கு பெரும் நிபந்தனைகள் விதித்து நாம் இந்த முயற்சியை தடுத்து நிறுத்தினோம். வழிநடத்தல் குழுவுக்குள், நாடாளுமன்றத் தேர்தலுக்கு, புதிய தேர்தல் முறை மாற்றத்தை கொண்டு வருவதையும் நாம் கடுமையாக எதிர்த்தோம்.

இன்று முழு நாடும் பழைய தேர்தல் முறையை ஏற்றுக் கொண்டுள்ளது. இது எமது வெற்றி. இந்த இனவாத முயற்சியைத் தடுத்து நிறுத்திய பெருமை த.மு.கூ., மு.கா., அ.இ.ம.கா. ஆகிய மூன்று சிறுபான்மை கட்சிகளுக்கு மட்டுமே உண்டு.

இப்போது புதிய அரசமைப்பு வரும் சாத்தியம் அருகி விட்டது. இதை ஊகித்தே பல வருடங்களுக்கு முன்னமேயே, புது அரசமைப்பு இது வரும்; ஆனால் வராது. நேரத்தை வீணடிக்காமல் வேறு வழிமுறைமையை நாட வேண்டும் என்று அடித்துக் கூறினேன். உண்மையைக் கூறி னேன்.

வேறுவழிமுறைமைஎன்றால், வழிநடத்தல் குழு என்ற பேச்சு பெட்டியை விடுத்து, அனைத்து தமிழ்க் கட்சி எம்.பிக்களின் ஒன்றியம் அமைப்போம் என்ற யோசனையையும் முன்வைத்தேன்.

சிங்கள கட்சிகள், அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து விட்டு அரசியல் தீர்வு முயற்சியை ஆதரிக்க வேண்டும் எனச் சொல்லும் தமிழ், முஸ்லிம் தலைமைகள், தமக்குள் அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து விட்டு ஒன்றுசேர முடியாமல் போனது ஏனோ என்ற கேள்வியை இன்று வரலாறு எம்மைப் பார்த்துக் கேட்கின்றது. இந்தக் கேள்வியை வரலாறு கேட்பதற்கு முன் நான் அன்றே கேட்டேன்.

இனியாவது தமிழ்க் கட்சிகள் தமக்குள் அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து விட்டு ஒன்றுசேர வேண்டும். அதுவே இன்று எம்முன் இருக்கும் ஒரே வழி.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமக்கு உரியதை கேட்டு பெற நாம் ஒரே குரலில் பேசவேண்டும். இதை உணர்ந்து செயற்படத் தயாராகும் கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட தமிழ் முற்போக்குக் கூட்டணி தயார் – என்றார்.

## உடும்பை இறைச்சியாக்க முயற்சி கைதான நபருக்கு அபராதம்.

மன்னார்,ஜன.21

காட்டில் பிடிக்கப்பட்ட உடும்பு ஒன்றை கொன்று இறைச்சியாக்க கையில் எடுத்துச் சென்ற நபர் ஒருவருக்கு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் இருபதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பேசாலை பொலிஸ் நிலைய பிரிவுக்குள் நபர் ஒருவர் காட்டுப் பகுதியிலிருந்து உடும்பு ஒன்றைப் பிடித்து அதைக் கொன்று இறைச்சியாக்குவதற்காக பை ஒன்றில் மறைத்து கையில் எடுத்துச் சென்றபோது ரோந்து சென்ற பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவரை பேசாலை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை (17.01.2019) மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

இவரின் குற்றத்துக்காக நீதிபதி குற்றவாளிக்கு இருபதாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் பத்தாயிரம் ரூபாவை உடன் செலுத்தும்படியும் மிகுதி பத்தாயிரம் ரூபாவை பிறிதொரு தவணையில் செலுத்தும்படியும் கட்டளை பிறப்பித்தார். (112)

## பொதுக்கூட்டமும் நிருவாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன. 21

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிருவாகத் தெரிவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளை கலந்துகொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

## நாளை

22.01.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : ஆயிலியம் பி.இ 2.53 வரை
திதி : பிரதமை மு.ப 9.28 வரை
சுபநேரம் : 11.05 - 12.35 வரை
இராகுகாலம் : 3.35 - 5.05 வரை

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு நேற்று திறப்பு






எஸ். நிதர்ஷன்

மூளாய்,ஜன.21

யாழ். குடாநாட்டு மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்கும் நோக்கில் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) திறந்துவைக்கப்பட்டது.

தென்னாசியாவிலேயே சிறந்த கூட்டுறவு வைத்தியசாலையான இதனை, மீண்டும் அதே நிலைக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்தத்துக்கு முன்னர் சிறப்பான முறையில் இயங்கிய இவ்வைத்தியசாலை பின்னர் வீழ்ச்சியை எதிர்நோக்கியிருந்தது. எனினும், இதன் ஆரம்பகால உறுப்பினர்கள் மற்றும் வைத்தியர்களின் ஒத்துழைப்புடன் பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டு தொடர்ந்து மக்களுக்கு வைத்திய சேவை வழங்கப்பட்டுவந்தது.

காலத்துக்கு காலம் பல அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களின் உதவியுடன் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வந்த போதிலும், தற்போது நவீன முறையில், சிறந்த மருத்துவ சேவையை வழங்கும் வகையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட இவ்வைத்தியசாலையைத் திறந்துவைக்கும் நேற்றைய நிகழ்வில், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், புனரமைப்புக்கு நிதியுதவி வழங்கியவர்களின் குடும்பத்தினர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமாரன் மற்றும் சிரேஷ்ட வைத்தியர்கள், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் உள்ளிட்ட கல்வியாளர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், இதன் ஆரம்பகாலஉறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## காட்டு யானைகளின் தொல்லையால் தேறாங்கண்டலில் நெற்செய்கை அழிவு

முல்லைத்தீவு,ஜன.21

முல்லைத்தீவு தேறாங்கண்டல் கிராமத்தில் தினமும் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன் பெருமளவான நெற்செய்கை காட்டுயானைகளால் அழிக்கப்படுவதாக பிரதேச விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தக் கிராமத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள இவ் வேளையில் இரவு வேளைகளில் யானைகளுக்கும் பகல் வேளைகளில் ஏனைய விலங்குகளுக்கும் காவல் இருக்க வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



குறிப்பாக நேற்று முன்தினமிரவு நெற்செய்கைகுள் நுழைந்த யானைகள் பெருளவான நெற்பயிர்களை அழித்துள்ளன என்றும் இதனால் அன்றாடம் யானைகளால் பெரும் துன்பங்களை எதிர்கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## மட்டுவிலில் நல்லூர் கந்தனின் நெற்புதிர் அறுவடை விழா

நல்லூர்,ஜன.21

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்று(20.01.2019) காலை சிறப்புற இடம்பெற்றது

தைப்பூசத்தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படும் இப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்குச் செல்வார்கள். அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து



கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம் பெற்றன .

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாக பண்பாட்டு விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இப் புதிர் விழா 285 ஆவது ஆண்டாக இந்த வருடமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது .

## கைதடி குருசாமி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி



கைதடி,ஜன.21

யாழ். கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய முதல்வர் நா.ஜெயபன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் , சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபையின் உபதலைவர் மயூரன், இலங்கையர் வாசுதேவன் (ஓய்வுநிலை உதவிச் செயலாளர், திட்டமிடல், சுகாதார அமைச்சு, மத்திய மாகாணம்) செல்வி அ.நிருபராணி (உதவிக் கோட்டக்கல்வி பணிப்பாளர், விஞ்ஞானம், தென்மராட்சி கல்வி வலயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் கௌரவித்து அழைத்துவரப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றதைத் தொடர்ந்து இறைவணக்கம், கொடியேற்றல் என்பன இடம்பெற்று ஒலிம்பிக் தீபமேற்றலுடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. விருந்தினர் உரை மற்றும் பரிசில் வழங்கலுடன்

## தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடம் திறப்பு

நுவரெலியா,ஜன.21

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட ஒலிபென்ட் தமிழ் வித்தியாலயத்துக்கு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் திறப்பு விழா விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலைக்கு புதிய கட்டடம் ஒன்று தேவை என இராஜாங்க கல்வி அமைச்சராக செயல்பட்ட போது அமைச்சர் இராதாகிருஷ்ணனின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்தே இந்த புதிய கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரம் 1 முதல் தரம் 5 வரை இயங்கும் இப் பாடசாலையில் சுமார் 150 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இதன்போது அமைச்சர் நாடாவை வெட்டி வைபவ



ரீதியாக கட்டடத்தை திறந்து வைத்தார், நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம், வலயக் கல்விப் பணிப் பளார், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## இளங்கலைஞர் மன்றத்தில் தைப்பூச நாள் வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

நல்லூர், சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில், இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தைப்பூச நாள் வகுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் ஆகிய வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளபடவுள்ளனர் என்றும் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்றும் மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## யூரோவில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தினால் ஏற்பாட்டில், "– ஒக் 26 இன் பின்னர் நிகழ்ந்த அரசியல் மாற்றமும் அதன் பின்னரான எதிர்பார்ப்புகளும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் –

இன்று பிற்பகல் 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மேற்படி சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளலாம் என்று சம்மேளனம் அறிவித்துள்ளனர்.

# பிரதமர் மோடியின் ஆட்சியில் அதிகரித்துள்ள கடன் தொகை

புதுடில்லி,ஜன.21

பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் நாட்டின் ஒட்டுமொத்த கடன் தொகை 50 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.



இந்தியாவின் 14ஆவது பிரதமராக கடந்த 2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி பதவியேற்றார். இவர் பதவியேற்ற சில மாதங்களில் பொருளாதார சீர்திருத்தம், கறுப்புபண ஒழிப்பு உள்ளிட்ட காரணங்களை கூறி பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி வரி போன்ற திட்டங்களை செயல்படுத்தினார்.

இந்நிலையில் மோடி தலைமையிலான நான்கரை ஆண்டுகால ஆட்சியில் 50 சதவீதம் அளவில் கடன் தொகை உயர்ந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் இந்தியாவின் கடன் மதிப்பு 54 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாக நிதி அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் வரையில் மத்திய அரசுக்கு உள்ள கடன் தொகை 82 இலட்சம் கோடிக்கு மேல் அதிகரித்துள்ளது. அதாவது 49 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதேபோல பொதுக்கடனை பொறுத்த வரை 48 இலட்சம் கோடியிலிருந்து 73 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

# மத்தியில் ஆட்சியில் மாற்றம்; இதுவே எங்கள் போர்க்குரல்

## மம்தா பானர்ஜி ஆவேச பேச்சு

கொல்கத்தா,ஜன.21

பிரதமர் மோடி ஆட்சியின் காலாவதி திகதி முடிந்து விட்டது, இனிமேல் மத்தியில் எதிர்க்கட்சிகள் தான் ஆட்சியை பிடிக்கும் என மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறினார்.



மேற்கு வங்க முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தலைமையில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் பிரமாண்ட மாநாடு நடைபெற்றது.

இதில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்று பேசினர். இறுதியாக மேற்கு வங்க முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி உரையாற்றினார். அவர் பேசுகையில்-

பாஜக ஒவ்வொரு மாநிலமாக ஆட்சியை இழந்து வருகிறது. மோடி அரசில் பல்வேறு ஊழல்கள் நடந்துள்ளன. மக்கள் இந்த அரசு மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள். பிரதமர் மோடியை தூக்கி எறிய மக்கள் தயாராகி வருகிறார்கள்.

பாஜகவை அகற்றுவதே எங்கள் அனைவரின் ஒரே நோக்கம். தேர்தலுக்கு பின் பிரதமர் குறித்து முடிவெடுப்போம். நாட்டில் தற்போது சூப்பர் எமர்ஜென்சி நடக்கிறது. மத்தியில் ஆட்சியில் மாற்றம், இதுவே எங்கள் போர்க்குரல் என்றார்.

# மகரவிளக்கு, மண்டல பூஜை நிறைவு ஐயப்பன் கோவில் நடை சாத்தப்பட்டது

திருவனந்தபுரம்,ஜன.21

சபரிமலையில் ஐயப்பன் கோவில் மகர விளக்கு, மண்டல பூஜை முடிந்ததை அடுத்து கோவில் நடை சாத்தப்பட்டது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மகர விளக்கு, மண்டல பூஜைக்காக கடந்த நவம்பர் மாதம் 17 ஆம் திகதி கோவில் நடை திறக்கப்பட்டது. உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 10-50 வயதுக்கு இடைப்பட்ட பெண்கள் சபரிமலை கோவிலுக்கு வந்தமையால் இந்து அமைப்புகளும், ஐயப்ப பக்தர்களும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மகரவிளக்கு, மண்டல பூஜை முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை சில பூஜைகளுக்கு பின்னர் கோவில் நடை சாத்தப்பட்டது.



மீண்டும் மாத பூஜைக்காக பெப்ரவரி 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஐயப்பன் கோயில் நடை திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலமைச்சராக ஸ்டாலின் ஒருபோதும் வரமாட்டார்

## தமிழக முதலமைச்சர் தெரிவிப்பு

சென்னை,ஜன.21

ஸ்டாலின் ஒருபோதும் முதலமைச்சராக வரமாட்டார் என்று முதலமைச்சர் பழனிசாமி பேசினார்.

மதுரை பாண்டிகோவில் சுற்றுசாலை பகுதியில் முதலமைச்சர் பழனிசாமி பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தி.மு.க. என்பது குடும்பக்கட்சி. அதிமுக என்பது மக்களின் கட்சி. அவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழகத்துக்கு எந்த திட்டங்களும் நிறைவேற்றப்பட்டனனத்தெரிய வில்லை. மத்தியிலும் கூட்டணி ஆட்சியில் இருந்தார்கள். மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தார்கள். ஆனால் தமிழகம் முன்னேற வில்லை. அவர்கள் குடும்பம் மட்டும் முன்னேறியது.



அ.தி.மு.க. கட்சியில்தான் தொண்டன் கூட எம்.எல்.ஏ-வாக, அமைச்சராக, முதலமைச்சராக கூட வரமுடியும். திமுகவில் கருணாநிதி முதலமைச்சராக இருந்தார். அவருக்குப் பின்னர் ஸ்டாலின் முதல்வராகத் துடிக்கிறார்.

அது எப்போதும் நடக்காது. அவருக்குப் பின்னர் அவரது மகன் உதயநிதி கட்சிக்கு வர துடிக்கிறார். ஆனால் நான் விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவன். எனக்கு அவர்களின் கஷ்டம் தெரியும். மக்கள் வசதியாக வாழவே மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இலவச மிக்ஸி, கிரைண்டர் கொடுத்தார். அதிமுக ஆட்சியில் தான் சிறந்த கல்வி வழங்கப்பட்டது என்றார்.

# சசிகலா சிறப்பு சலுகை பெற்றது உண்மை விசாரணைக்குழு அறிக்கையில் தகவல்



பெங்களூரு,ஜன.21

சிறையில் சசிகலா சிறப்பு சலுகை பெற்றது உண்மைதான் என விசாரணைக்குழு அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சசிகலா, அவரது உறவினர் இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு விதிமுறைகளை மீறி சலுகைகள் அளிக்கப்பட்டன என டிஐஜி ரூபா புகார் கூறியிருந்தார். ஆனால் அதை சிறைத்துறை உயரதிகாரிகள் மறுத்திருந்தனர்.

அது தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வினய்குமார் தலைமையிலான உயர் மட்டக்குழு, சிறையில் ஆய்வு மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை கடந்த நவம்பரில் அரசிடம் சமர்ப்பித்தது.

அதை ஏற்று லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டபோதும், அறிக்கை குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்நிலையில் அந்த அறிக்கை விவரங்கள் தற்போது கசிந்துள்ளன.

அதில் சசிகலாவுக்கும், இளவரசிக்கும், சிறையில் விதிகளை மீறி ஐந்து அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சசிகலா சிறையில் சமைத்து சாப்பிட அனுமதிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆடை மற்றும் பார்வையாளர் சந்திக்கும் விவகாரத்திலும் விதிகள் மீறப்பட்டுள்ளன என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# குடும்பத்துக்கு விஷம் கொடுத்து கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்த ஆசிரியர்

கோவை,ஜன.21

கோவை கருமத்தம்பட்டியில் தாய், மனைவி மற்றும் குழந்தைகளை கொன்று விட்டு அரசு பள்ளி ஆசிரியர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

கோவையை அடுத்த கருமத்தம்பட்டி அமலி நகரை சேர்ந்தவர் அந்தோணி ஆரோக்கியதாஸ் (வயது 38). இவர் திருப்பூர் மாவட்டம் கூலிபாளையத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார். இவர் கடந்த 6 மாதமாக அமலி நகரில் வாடகை வீட்டில் மனைவி ஷோபனா (30), மகன் ரித்திக் மைக்கேல் (7), மகள் ரியா ஏஞ்சலின் (1) மற்றும் தாயார் புவனேஸ்வரி (65) ஆகியோருடன் வசித்து வந்தார்.

அந்தோணி ஆரோக்கியதாஸுக்கு கடந்த 12 ஆண்டுகளாக முதுகு வலி இருந்து வந்தது. ஆனால் குணமாக வில்லை. இதனால் மனம் உடைந்த அவர்



மனைவி, குழந்தைகள் மற்றும் தாயாருக்கு விஷம் கொடுத்து கொன்று விட்டு தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அந்தோணி ஆரோக்கியதாஸ் கடிதம் எழுதி வைத்துள்ளார். அதில் தனக்கு பல ஆண்டுகளாக முதுகு வலி இருந்துள்ளது என்றும், இதனால் மனம் வெறுப்படைந்து இந்த முடிவை மேற்கொண்டேன் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய தரைக்கடலில் படகுகள் மூழ்கி 170 பேர் இறந்திருக்கலாமென அச்சம்?

மத்திய தரைக்கடல் பகுதியில் இரு படகுகள் வெவ்வேறு இடங்களில் கவிழ்ந்ததில், 170 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் தெரிவித்துள்ளது.

சுமார் 117 பேர்கள் பயணித்த படகானது, லிபிய கடற்பரப்பில் மூழ்கியதாக இத்தாலியின் கடற்படை தெரிவித்துள்ளது.

ஆனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் கூறுகிறது.

53 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த மற்றொரு படகு, மத்திய தரைக்கடலின் மேற்குப் பகுதியிலுள்ள அல்போரான் கடற்பரப்பில் காணாமல் போனதாக கூறப்படுகிறது.

கடந்த 2018 ஆம் ஆண்டு மட்டும் மத்திய தரைக்கடல் பகுதியை கடக்க முயன்றபோது 2,200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொலிவியாவில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து



22 பேர்பலி; 37 பேர் காயம்

லா பஸ்,ஜன.21

பொலிவியாவில இரண்டு பஸ்கள் நேருக்குநேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 22 பேர் பரிதாபமாக உயிரி ழுந்தனர். 37 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிவியாவின் தலைநகர் லா பஸ்ஸில் இருந்து சுமார் 250 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகரம் சல்லபட்டா. இங்கு நேற்று முன்தினமிரவு இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதின. இதில் 22 பேர் பரிதாபமாக உயரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர்.

காயம் அடைந்தவர்களில் மிகவும் மோசமான நிலையில் இருப்பவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சல்லபட்டா மேயர் தெரிவித்துள்ளார்.

# மெக்சிக்கோ பெற்றோல் குழாய் வெடிப்பு இறப்பு எண்ணிக்கை 71 ஆக உயர்ந்தது



மெக்சிக்கோ, ஜன.21

மெக்சிக்கோ நாட்டில் எண்ணெய் குழாய் வெடித்து நேரிட்ட தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 71ஆக உயர்ந்தது.

மெக்சிகோ நாட்டின் ஹிடால்கோ மாகாணத்தில் டலாகியூலில்பான் என்ற இடத்தில் பெற்றோல் குழாயில் உடைப்பு ஏற்பட்டு பெற்றோல் வெளியே ஆறாக பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

இது குறித்த தகவல் அங்கு காட்டுத்தீயைப் போல பரவியது. உடனே மக்கள் வாளிகளையும், கான்களையும் எடுத்துக்கொண்டு பெற்றோல் எடுத்துக்கொண்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் குழாயில் தீப்பிடித்தது. அந்த தீ மளமளவென பரவி, கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது. இதில் ஏராளமான மக்கள் சிக்கிக்கொண்டனர்.

தீயில் கருகி 20 பேர் பலியானார்கள் என முதலில் தகவல் வெளியான நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 71ஆக உயர்ந்துள்ளது. அவர்களின் உடல்கள், அடையாளம் காண முடியாத அளவுக்கு கரிக்கட்டைகள் போல மாறி விட்டன.

சம்பவ இடத்துக்கு அந்த நாட்டின் அதிபர் மேனுவல் லோபஸ் ஓப்ரடார் விரைந்தார். மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோரை கண்டு ஆறுதல் கூறினார்.

# அமெ. தேர்தலில் ரஷ்ய தலையீடு பிரபல மொடல் அழகி ரிப்கா கைது



மொஸ்கோ,ஜன.21

அமெரிக்க தேர்தலில் ரஷ்ய தலையீடு விவகாரத்தில், பிரபல மொடல் அழகி ரிப்கா கைது செய்யப்பட்டார்.

டிரம்பின் தேர்தல் பிரசாரத்தில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததற்கு தன்னிடம் ஆதாரம் உள்ளது என்று பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல மொடல் அழகி நாஸ்டியா ரிப்கா கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். இந்த நிலையில் அவர் மொஸ்கோ விமான நிலையத்தில் ரஷ்ய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முன்னதாக அவர் தாய்லாந்து நாட்டில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

ரஷ்ய உள்துறை அமைச்சகம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் நாஸ்டியா ரிப்காவும், மேலும் 3 பேரும் விபசாரத்தில் ஈடுபட்டு வந்தனர் என்றும், அதனால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் நாஸ்டியா ரிப்காவுக்கும், அவரோடு கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ள 3 பேருக்கும் அதிகபட்சம் 6 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளது.

# சோமாலியாவில் அரசு படைகள் அதிரடி 73 பயங்கரவாதிகள் கொன்று குவிப்பு



மொகாதிசு, ஜன.21

சோமாலியாவில் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் 73 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல்கொய்தா பயங்கரவாத அமைப்புடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ள அல்-சபாப் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் அங்கு கிஸ்மாயோ நகரத்துக்கு அருகே அமைந்துள்ள இராணுவ தளத்தின் மீது அல்-சபாப் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர்.

ஆனால் உள்நாட்டுப்படைகள், சர்வதேச படைகளின் ஆதரவுடன் கடுமையாக எதிர் தாக்குதல் நடத்தின. இதில் அல்-சபாப் பயங்கரவாதிகள் நிலை குலைந்து போயினர்.

வான் வழியாக நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், 73 அல்-சபாப் பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர் என்றும், அவர்களது கவச வாகனங்கள் அழிக்கப்பட்டன என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# புற்றுநோயால் மரணம் அடைந்த ஆசிரியை இறுதிச்சடங்கில் உருக்கம்

லண்டன், ஜன.21

இங்கிலாந்தில் புற்றுநோயால் மரணம் அடைந்த தலைமை ஆசிரியை இறுதிச்சடங்கில், மாணவர்கள் தீட்டிய ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டியில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இங்கிலாந்து நாட்டில் பாத் என்ற இடத்தில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் சூ ஈஸ்ட் (வயது 58). இவர் மாணவ, மாணவி களுக்கு அவர்கள் விரும்பும் பாணியில் பாடங்கள் கற்றுத்தந்து அவர்களின் அன்பை அமோகமாக பெற்றார்.

இந்த நிலையில் சற்றும் எதிர்பாராத நிலையில் அவரைப் புற்றுநோய் தாக்கியது. அதிலிருந்து மீள்வதற்கு அவர் போராடினார். ஆனால் அந்தப் போராட்டம் வெற்றி பெறவில்லை.

உயிருக்காக போராடியபோது அவர் தனது மாணவ, மாணவிகளுக்கு நெஞ்சை உருக்கும் கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர், தான் புற்றுநோயால் அவதியுற்று வருவதையும், தான் விரைவில் மரணம் அடையப்போவதையும் வேதனையுடன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அவர் கடந்த சில தினங்களுக்கு முன் மரணம் அடைந்தார். அவரது இறுதிச்சடங்கில் அவரிடம் படித்த, படித்துக்கொண்டிருந்த சுமார் 700 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் தங்களுக்கு பிரியமான ஆசிரியை நிரந்தரமாக ஓய்வு எடுப்பதற்கான சவப்பெட்டியின் மீது அலங்கரிப்பதற்கு அவர்கள் வண்ண ஓவியங்களை தீட்டி, அந்த தாள்களை எடுத்து வந்திருந்தனர். அந்த தாள்கள், சவப் பெட்டியின் மீது ஒட்டி அலங்கரிக்கப்பட்டன.



அதைத் தொடர்ந்து தேவாலயத்தில் பிரார்த்தனையும், உடல் நல்லடக்கமும் நடந்தன.

# அசுரனை அழிக்க முருகன் வீரவேலை கையில் ஏந்திய நாளே

## தைப்பூசம்

அசுரனை அழிக்க அன்னையிடம் வீரவேலை வாங்கி, தமிழ்க்கடவுள் முருகன் கையில் ஏந்திய நாளே தைப்பூசம் ஆகும்.

தமிழ் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத் திலே பூச நட்சத்திரம் வரும் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக (பறுவம்) இருக்கும். தைப்பூசம் முருகப்பெருமானுடைய விஷேட தினமாகும். அன்றைய தினம் குழந்தைகளுக்கு தோடு குத்துதல், ஏடு தொடக்குதல் போன்ற வற்றை சிறப்பாக செய்து வைப்பார்கள். மற்றும் அடியார்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவார்கள்.

இந்த நாளில் ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட அனைத்து முருகன் கோவில்களிலும், எல்லா சிவன் கோவில்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசத்தன்று முருகப் பெருமான் கோவில்களில் பக்தர்கள் காவடி, பால்குடம் எடுத்தல் போன்ற பல்வேறு நேர்த்திக் கடன்களை செலுத்துகின்றனர். வரலாறு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை.

எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவ பெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒருதலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவபெருமானிடம் வேண்டினர்.

கருணைக்கடலாம் எம்பெருமான், தேவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தன். சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளியான 6 தீப் பொறிகள் 6 அழகான குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்களால், அக் குழந்தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஆறுமுகங்களுடன் அவதரித்தது.

அப்படி அவதரித்தவரே கந்தன் எனப்படும் முருகனாவார். சிவபெருமானின் தேவியான அன்னை பார்வதி தேவியானவள் ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில்தான். அதன் காரணமாகவே பழனி மலையில் தைப் பூசத்திருவிழா மற்ற முருகன் கோவில்களைக் காட்டிலும் வெகுச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அப்படி அளிக்கப்பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப்பாற்றினான். தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயில் வதம் செய்து தேவர்கள் நிம்மதி அடையச் செய்தவர் முருகக் கடவுள்.

எனவே தான் அசுரர்களை வதம் செய்ய முருகப்பெருமான் பயன்படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடி பணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம். தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குகின்றனர்.

சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப்பார்கள். ஆறுமுகப் பெருமானின் அருளை அடைவதற்கு தைப்பூசம் உகந்த நாள்.




# “தைப்பூசம் காணாது போதியோ?”

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

> “நெல் வயலிலே “புதிரெடுத்தல்” என்கின்ற பாரம்பரிய சம்பிரதாய பூர்வ நிகழ்வும் இன்று தான் செய்யப்படுகின்றது.”



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லா வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய இளைய குமாரர் முருகப் பெருமானுக்குரிய விசேட நன்னாள் “தைப்பூசம்” இன்றாகும்.

தை பிறந்தால் கூடவே விரதங்களும் விழாக்களும் தொடர்ந்து வரும். அந்த வகையில் புனித புண்ணியத் திருநாளான தைப்பூசம் இன்று கொண்டாடப்படுகின்றது.

சமயகுரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தப் பெருமகனார் தமது தேவாரத்திலே, “தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்?” என்று குறிப்பிடுமளவுக்கு இந்தத் தைப்பூசம் முக்கியத்துவம் பெறுகின்றது.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் இன்றைய தைப்பூச நன்னாளில் விரதமிருந்து நோன்பு காத்து கலியுக வரதனாகிய கந்தப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்வர். இது ஒரு புனித புண்ணிய நாளாகையால் ஏடுதொடங்குதல் எனப்படுகின்ற வித்தியாரம்பமும் காது குத்தல் எனப்படுகின்ற கர்ண வேதனமும் இன்று நிகழ்த்தப்படுகின்றது.

அது மாத்திரமின்றி –

நெல் வயலிலே “புதிரெடுத்தல்” என்கின்ற பாரம்பரிய சம்பிரதாய பூர்வ நிகழ்வும் இன்றுதான் செய்யப்படுகின்றது. வியாபாரத்தின் புதுக்கணக்குப் பதிதல், புது ஏடு எழுதுதல், வர்த்தக ஆரம்பம் என்பனவும் இன்றுதான் நடைபெறுகின்றன.

இத்தத் தைப்பூச நன்னாளில் விரதமிருக்க விரும்புவோர் காலை எழுந்து புனித புண்ணிய நீராடி, சந்தியாவந்தனம் முடித்துத் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, அருகில் உள்ள ஏதாவது ஒரு முருகன் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். பகலில் ஆகாரம் ஏதுமின்றி முருகப் பெருமானைச் சிந்தித்த வண்ணம் தோத்திர பாராயணஞ் செய்து இறை தியானத்துடன் இருந்து மதியம் ஒரு பொழுது உண்ணலாம். முடியுமானால் ஓர் அடியாருக்கு அன்னதானம் செய்வது உத்தமம். இரவு பால் பழம் அருந்தி முருகப் பெருமானை சிந்தித்து வந்தித்துச் சேவிக்க வேண்டும்.

இந்தத் தைப்பூச நன்னாளில் முருகன் குடியிருக்கும் கோயில்களில் எல்லாம் விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகளும் இடம் பெறும்.

இந்தியாவில் திருச்செந்தூர், பழநி, திருவேரகம், திருத்தணி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை ஆகிய ஸ்தலங்களில் முருகனுக்கு விசேட விழா எடுக்கப்படும். இலங்கையிலே கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், பொலிகண்டி, மண்டூர், சந்நிதி முதலிய இடங்களிலே தைப்பூச விழா வெகு விமரிசையாக நடைபெறும்.

“தைப்பூசத் திருநாளில் முருகனையே பாடுவோம். முருகனையே பரவுவோம்” என்று அடியார் பெருமக்கள் ஆரவாரத்துடன் கந்தனைக் கை தொழுது விழாவெடுப்பது வழக்கம்.

ஆகவே, இன்றைய தைப்பூச புனித புண்ணிய நாளிலே நாங்களும் முருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி ஆராதனைபண்ணி, இது காறும் பட்ட துன்பதுயரங்கள் யாவும் நீங்கி இனிமேலாவது யாழ்ப்பாணத்திலே வாள் வெட்டுக் கலாசாரம் நீங்கி எல்லோருக்கும் உதவிபுரியும் பண்பாட்டுக் கலாசாரம் வளர்ந்து நல்வாழ்வு வாழ அருளுமாறு பிறார்த்தனை செய்திருப்போமாக.

*

## அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகள் தொடர்பில்

# வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களுடன் சித்தார்த்தன் எம்.பி. கலந்துரையாடல்



சுன்னாகம்,ஜன.21

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் (19.01.2019) யாழ். கந்தரோடையில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக அவர்களது முன்மொழிவுகள் பெறப்பட்டு, பெறப்பட்ட முன்மொழிவுகளைக் கொண்டு மானிப்பாய் தொகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் உத்தேசித்து அந்த வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களுடன் மேற்படி கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

இதில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலிகாமம் தெற்கு பிரதேசசபை தவிசாளர் தர்சன், உபதவிசாளர் பரமேஸ்வரலிங்கம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையினுடைய வெற்றிபெற்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களும் பங்கேற்றுதங்களுடைய அபிவிருத்தி திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்மொழிவாக வழங்கினார்கள்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் யுகராஜும் கலந்துகொண்டிருந்தார்.

## யாழ். நகர் அபிவிருத்திப் பணிகள்; முதல்வர் - ஆளுநர் நேரில் ஆராய்வு



யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ் மாநகரின் எதிர்கால நகர்ப்புற அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் ஆகியோரின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பிரதான பேருந்து நிலையம், அங்காடி கடைத்தொகுதி உள்ளிட்ட நகரின் அபிவிருத்திகள் இடம்பெறவுள்ள முக்கிய இடங்களுக்கு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் குறிப்பிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது டன், தற்போதைய நிலைமைகள், தேவைகள் குறித்தும் நேரில் அறிந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற திட்டங்கள் தொடர்பில் இதன் போது முதல்வரினால், ஆளுநருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இக் களவிஜயத்தின் போது யாழ் மாநகர ஆணையாளர், சிரேஷ்ட அதிகாரிகள், ஆளுநரின் செயலாளர், உயர் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் என்போர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டு. சவுக்கடி கடற்கரை முன்றலில் சிறப்புற நடைபெற்ற பட்ட திருவிழா

மட்டக்களப்பு,ஜன.21

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை மக்கள் செயல் கழகம் ஏற்பாடு செய்திருந்த பட்டத்திருவிழா நேற்று முன்தினம் தினம் 19 மட்டக்களப்பு சவுக்கடி கடற்கரை முன்றலில் இடம்பெற்றது.

இத்திருவிழாவானது கழகத்தின் செயலாளர் லோகநாதன் நிரோஜன் தலைமையில் நடைபெற்றதுடன் இதன் போது கைப்பொங்கல் தின உழவர் திருநாள் வழிபாடு, பொங்கல் வழிபாடு பற்றும் முட்டி உடைத்தல் சிறுவர்களுக்கான சிறப்பு விளையாட்டுக்கள் பட்டம் ஏற்றும் போட்டி என பல நிகழ்வுகள் நடைபெற்றன இதில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## பெரிய பரந்தனில் பாலம் அமைக்க கரைச்சி பிரதேச சபை அடிக்கல் நடல்

கிளிநொச்சி,ஜன.21

கரைச்சி பிரதேசசபையின் பாதீட்டில் பெரியபரந்தன் வட்டாரத்தில் இரண்டு பெட்டிப் பாலத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (19.01.2019) நடைபெற்றது.

கிளிநொச்சி பெரிய பரந்தன் வட்டாரத்தில் உள்ளடங்கும் உருத்திரபுரம் வடக்கு எள்ளுக் காட்டிலும், சாளம்பன் பகுதியிலும்பெட்டிபாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வே நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர், பெரியபரந்தன் வட்டாரத்தின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அமைப்பாளர் சு.யதீஸ்வரன், செயற்பாட்டாளர் வை.கௌசலா மற்றும் கமக்கார அமைப்பினர் பிரதேச மக்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.



## முள்ளியவளையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

முள்ளியவளை,ஜன.21

முள்ளிவளையில் 58 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் முள்ளியவளை வடக்கு துயர்துடைக்கும் கரங்கள் அமைப்புடன் இணைந்து முள்ளிய வளை வடக்கினை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 58 பேருக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரண பொருள்கள் வழங்கப்பட்டன.

முள்ளியவளை வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் சமூக சேவையாளர் கலைக்கோன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதத் தலைவர்கள் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உப தவிசாளர் இரவீந்திரன்,சபை உறுப்பினர் ஜெகன் ஆகியோருடன் மக்கள் நலன் காப்பகத்தின் நிறுவுநர் கத்தகன் ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர்.



## யாழில் நகைக்கடைக்குள் புகுந்த குழுவினர் உரிமையாளரை தாக்கிவிட்டு தப்பினர்!

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள நகை கடை ஒன்றுக்குள் புகுந்த குழு ஒன்று கடையின் உரிமையாளர், உரிமையாளரின் மனைவி மற்றும் மைத்துனன் ஆகியோரை மூர்க்கத்தனமாக தாக்கிவிட்டு, பொலிஸாருடைய பிடியில் இருந்து லாவகமாக தப்பிச்சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் யாழ்.பிரதான வீதியில் நகைக் கடை ஒன்றில் நகை செய்ய கொடுத்த வாடிக்கையாளர்கள் சிலர் கடைக்கு வந்துள்ளனர்.

இதன்போது அவர்கள் செய்ய கொடுத்த நகையின் அளவு சற்று அதிகம் என்பதால் மேலதிகமாக இரண்டாயிரம் ரூபாய் பணத்தைச் செலுத்துமாறு கடையின் உரிமையாளர் கூறியுள்ளார்.

இதனையடுத்து கடையின் உரிமையாளருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட கும்பல் கடை உரிமையாளரை யும், அவருடைய மனைவியையும் குரூரமாக தாக்கியுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த நகைக்கடை உரிமையாளரின் மைத்துனரையும் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். இதன் பின்னர் சம்பவ இடத்தில் நின்றவர்களும், அங்குவந்த போக்குவரத்து பொலிஸார் இருவரும் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய முயற்சித்தனர்.

எனினும் தாக்குதல் நடத்தியவர்கள் பொலிஸாரையும் தாக்க முயற்சித்ததுடன், அங்கிருந்து லாவகமாக தப்பிச்சென்றனர். இந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் 2 மணித்தியாலங்களாகியும் மேலதிக பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை.

இதனால் அங்கு கடமையில் இருந்த 2 போக்குவரத்து பொலிஸாரால் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்து குற்றவாளிகளை கைது செய்ய முடியவில்லை.

மேலும் தாக்குதல் நடத்திய கும்பல் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்த முயற்சித்ததுடன், பொலிஸாருடைய பிடியை தட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். நீண்ட நேரத்தின் பின்னரே சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகை தந்தனர்.

# ஹோக்லியின் சாதனையை தகர்த்தார் ஹசிம் அம்லா



போர்ட் எலிசபெத்,ஜன.21

இந்திய அணித் தலைவர் விராட் ஹோக்லியின் சாதனையை தென்னாபிரிக்க அணியின் தொடக்க வீரர் ஹசிம் அம்லா தகர்த்தார்.

கிரிக்கெட் உலகின் ரன் மெஷின் என்று வர்ணிக்கப்படும் இந்திய அணித் தலைவர் விராட் ஹோக்லி, கிரிக்கெட் அரங்கில் பல்வேறு +சாதனைகளை படைத்து வருகிறார். இந்த நிலையில், ஹோக்லியின் சாதனைகளில் ஒன்றை தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஹசிம் அம்லா முறியடித்துள்ளார்.

27 சதங்களை குறைந்த இனிங்ஸ்களில் அடித்த விராட் ஹோக்லியின் சாதனையை பாகிஸ்தானுக்கு எதிரான நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சதம் அடித்து அம்லா முறியடித்துள்ளார்.

விராட் ஹோக்லி 169 இனிங்ஸ்களில் 27 சதம் அடித்ததே அதிவேகம் என்று இருந்ததை, அம்லா 167 இனிங்ஸ்களில் அடித்து முறியடித்துள்ளார்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் விலகினார் ஆஸி வீரர் ஹசில்வுட்



சிட்னி,ஜன.21

முதுகுவலி காரணமாக இலங்கைக்கு எதிரான தொடரில் இருந்து ஹசில்வுட் விலகியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் வரும் 24 ஆம் திகதி பிரிஸ்பேனில் (பகல்–இரவு ஆட்டம்) தொடங்குகிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வுட் விலகியுள்ளார். முதுகுவலி காரணமாக அவதிப்பட்ட ஹசில்வுட்டுக்கு ஸ்கான் செய்து பார்க்கப்பட்டதில் காயத்தின் தன்மை அதிகமாகியிருப்பது தெரிய வந்தது.

அவருக்குப்பதில் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட்சன் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### முதல் ஒருநாள் போட்டியில்

# பாகிஸ்தான் அபார ஆட்டம் வீழ்ந்தது தென்னாபிரிக்கா



போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்காவை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது பாகிஸ்தான்.

தென்னாபிரிக்கா – பாகிஸ்தான் இடையிலான முதல் ஒருநாள் போட்டி போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா ஹசிம் அம்லா (108), வான் டெர் டஸ்சன் (93), ஹெண்ரிக்ஸ் (45) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 2 விக்கெட் இழப்புக்கு 266 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 267 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களம் இறங்கியது. தொடக்க வீரரான பகர் சமான் 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், மற்றொரு தொடக்க வீரர் இம்ஷமா–உல்–ஹக் 86 ஓட்டங்கள் குவித்தார். பாபர் ஆசம் 49 ஓட்டங்கள் அடித்தார்.

அனுபவ வீரர் முகமது ஹபீஸ் 63 பந்தில் 8 பவுண்டரி, 2 சிக்சருடன் 71 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருக்க பாகிஸ்தான் 49.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 267 ஓட்டங்கள் அடித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் 1–0 என முன்னிலைப் பெற்றுள்ளது. 2 ஆவது போட்டி டேர்பனில் நாளையதினம் (22 ஆம் திகதி) நடக்கிறது.



# ஷரபோவா அவுட்

மெல்பேர்ன்,ஜன.21

மெல்பேர்னில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலிய ஓபனில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் மரியா ஷரபோவா காலிறுதி வாய்ப்பை இழந்தார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஷ்லெய்க் பேர்ட்டியை எதிர்கொண்டார்.

முதல் செட்டை மரிய ஷா ரபோவா 6–4 எனக் கைப்பற்றினார். ஆனால், 2 ஆவது செட்டை 1–6 எனவும், 3 ஆவது செட்டை 4–6 எனவும் எளிதாக இழந்தார். இதனால் காலிறுதி வாய்ப்பை இழந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

சொந்த மண்ணில் ரபோவை வீழ்த்திய ஆஷ்லெய்க் பேர்ட்டி, காலிறுதியில் 8 ஆம் நிலை வீராங்கனையான கிவிட்டோவை எதிர்கொள்கிறார்.

# ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் நீக்கப்பட்டார் நுவான் பிரதீப்



கொழும்பு,ஜன.21

ஆஸ்திரேலிய அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் நீக்கப்பட்டுள்ளார்.

நுவான் பிரதீப்பின் இடது காலில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் இத் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிக்கிடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெடரரின் பெருந்தன்மை


மெல்பேர்ன்,ஜன.21

அடையாள அட்டை அணியாததால் பாதுகாவலர் நடப்பு சம்பியனான ரோஜர் பெடரரை தடுத்து நிறுத்தினார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் விளையாடி வரும் பிரபல வீரரான ரோஜர் பெடரர் போட்டியில் பங்கேற்பதற்காக மைதானத்துக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் தனது அடையாள அட்டையை அணியாமல் சென்றார்.

இதைப் பார்த்த பாதுகாவலர் ரோஜர் பெடரரிடம் அடையாள அட்டையை காண்பிக்கும்படி கூறி அவரை தடுத்து நிறுத்தினார். உடனே பெடரர் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் தனது அணியினர் அடையாள அட்டையை கொண்டு வருவதாக கூறி சிறிது நேரம் அங்கு காத்திருந்தார். பின்னர் அடையாள அட்டையை காண்பித்துவிட்டு மைதானத்திற்குள் சென்றார்.

பிரபல வீரரான பெடரர் பெருந்தன்மையுடன் நடந்து கொண்ட விதத்தை இணைய தளத்தில் பலர் பாராட்டியுள்ளனர்.



## எக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லாகவே எனக்குப் படுகின்றது. ஒருமித்த நாடு என்றால் 'எக்சத் ராஜ்ஜிய' என்று வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் கூட்டணி கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

புதிய அரசமைப்பில் சமஷ்டிக் குணாதிசயம் உள்ளது என சுமந்திரன் கூறியுள்ளார். அரசமைப்பு தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

'ஏக்கிய ராஜ்ஜிய' என்பது ஒருமித்தநாடாக இருக்கமுடியாது. 'ஏக்கிய ராஜ்ஜிய' என்பது ஒற்றையாட்சியுடைய ஒரு நாடு. அதனை ஒருமித்த நாடு என்று சொல்வது மக்களை ஏமாற்றும் செயலாகவே எனக்குப் படுகின்றது. ஒருமித்த நாடு என்றால் 'எக்சத் ராஜ்ஜிய' என்று வர வேண்டும்.

அதாவது ஒற்றையாட்சியுள்ள நாடு. ஒருமித்த நாடு என்று சொல்வது மக்களை ஏமாற்றுவதாகத் தான் எனக்குப் படுகின்றது. ஒருமித்த நாடு என்றால் எக்சத் ராஜ்ஜியஎன்றுவரவேண்டும். அதுதான் ஒருமித்த நாடு. எக்சத் என்றால் யுனைற்றட் வெவ்வேறு விதமான கட்சிகள் அல்லது இனங்களோ, பிரதேசங்களோ ஒருமிக்கச் சேர்ந்து வருவது எக்சத். அவ்வாறு எக்சத் என்று சொல்லாமல் ஏக்கிய என்றுசொல்லிவிட்டுஅதுஒருமித்த நாடு என்று சொல்ல முடியாது.

அவ்வாறு ஒருமித்த நாடு என்றுசொல்லும்போதுஎங்கேயோ இருந்தவர்கள் திரும்பி ஒருமித்து வந்திருக்கின்றார்கள் என்பதுதான் அதன் அர்த்தம். அதன் அர்த்தம் ஏக்கியவில் இல்லை. இது சம்மந்தமாக முழுமையான விடயங்களை உள்ளடக்கிச் சில தினங்களில் கேள்வி பதில் ஒன்றையும் அனுப்ப உள்ளேன்.

சமஷ்டி சம்பந்தமான விடயங்கள் புதிய அரசியல் யாப்பில் இல்லை என்றும், ஆனால் முன்னேற்றகரமான விடயங்கள் இருப்பதாகவும் தவறாக கூறியுள்ளார். ஆகவே அரசு முன்னேற்றகரமான விடயங்களை அவ்வாறு தருவதில் எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் எங்களைப் பொறுத்தவரை சில விடயங்கள் கட்டாயமாகத் தரப்படவேண்டுமென பதில் திடமாக இருக்கின்றோம்.

அவ்வாறு தராமல்விட்டால் எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்களின் அடையாளமே தெரியாமல் போய்விடும். அதனால் தான் வடக்கு– கிழக்கை இணைக்க வேண்டுமென்று சொல்கின்றோம். எங்கள் பாரம்பரியத்தின் நிமித்தம் சுயாட்சியின் உரித்து சுவதேச ஆவணங்கள் சட்ட ஆவணங்கள் அடிப்படையில் இருக்கிறதென்று சொல்லுகிறோம்.

அதனடிப்படையில் நாங்கள் எங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருப்பதால் சமஷ்டி அரசுதேவைஎன்றுசொல்கிறோம். எதிர்வரும் காலத்தில் இந்த மூன்றும் எங்களுக்கு இல்லாவிட்டால் வடக்கு–கிழக்கு மாகாணம் முழுமையாக எங்களுக்குச் சொந்தமில்லாமல் போய்விடும். அதனால் தான் இந்த மூன்றும் எமக்கு வேண்டுமென்று கோருகின்றோம்.

ஆனால் அரசு ஏதோ சில நன்மைகளைப் பெற்றுத் தர முன்வந்தால் அதனை நாங்கள் ஏற்று முன்னேறிக் கொண்டு போகலாம். ஆனால் நாங்கள் அதனோடு நின்றுவிட மாட்டோம். எங்களுக்குத் தேவையானது கிடைக்கவேண்டும். பிரச்சினை தமிழர்களுக்கானதே. தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க என்ன செய்யவேண்டுமோ அதனையே அரசு செய்ய வேண்டும் – என்றார். (ஐ–07)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பகுதியைச் சேர்ந்த மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

பளை கரந்தாய் பகுதியை சேர்ந்த சுதன் (வயது – 40) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளி போரில் ஒரு காலையும் இழந்துள்ளார்.

பளையில்உள்ளவீடொன்றில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டு உள்ளதாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசியத்தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை அந்தவீட்டைச்சோதனையிட்டனர்.

அங்கு இரண்டு கைத்துப்பாக்கி, ஒரு கட்டுத் துவக்கு மற்றும் 150 துப்பாக்கிரவைகள் மீட்கப்பட்டதாகவும், அதனுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தில் வீட்டில் பெற்றோருடன் வசித்து வைத்த நபரைக் கைது செய்தனர் எனவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட நபரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைக்காக வவுனியாவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (ஐ)

## இப்போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எம்.ஏ. சுமந்திரன்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் –

ஒற்றையாட்சி என்னும்போது ஒரு நாடாளுமன்ற முறைமையே இருக்கும். மாகாண சபைகள் இருக்கும். ஆனால் சமஷ்டியும் வேண்டாம். ஒரே நாட்டில் அதிகாரங்களைப்பகிர்மற்றும்பாடுகளைச் செய்யலாமென்றே கூறுகிறோம்.

ஏக்கிய என்பதற்கு ஒத்த வார்த்தை தான் ஒருமித்த நாடு. 1972 இலிருந்து அரசமைப்பில் ஒற்றையாட்சி என்றே சொல்லப்படுகிறது. அது தவறு. ஆட்சி என்பது நாடல்ல. அது நிர்வாகம்.

நாங்கள் கொண்டுவந்த விக்கினேஸ்வரன் மக்களுக்கு முறையாக சேவையாற்றவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் – என்றார். (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஒன்பது மாகாண சபைகளுக்கும், ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு வசதியாகவே தற்போது செயற்பாட்டு நிலையில் உள்ள தென் மாகாண சபை, ஊவா மாகாண சபை, மேல் மாகாண சபை ஆகியவற்றைக் கலைக்க ஜனாதிபதி அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இது தொடர்பான ஆவணத்தில் அவர், பிலிப்பைன்ஸ் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே கையெழுத்திட்டுவிட்டார் என்றும், இந்த அமைச்சரவைப் பத்திரம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதம், ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரேநாளில்நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## மோடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று, மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் முதல் வாரத்தில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார் என்று, மஹிந்தவின் தனிப்பட்ட செயலர் ஒருவர், கொழும்பு வாரஇதழ் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம்திகதி ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்குமுன்னர், மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டு, இந்தியப் பிரதமரைச் சந்தித்திருந்தார்.

அரசியல் சதித் திட்டம் தோல்வியில் முடிந்த பின்னர், எதிர்க் கட்சித் தலைவராகப் பதவியேற்றுள்ள நிலையில் மஹிந்த ராஜபக்ஷமீண்டும்இந்தியாவுக்குப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ஐ)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறும் தேசிய நிகழ்வுக்காக ஜனாதிபதி வருகை தரவுள்ளார். அவரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வுள்ளதாக கேப்பாபுலவு போராட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இதுவரை எந்த முடிவும் அரசால் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் விரைவில் தங்களுக்கு ஒரு பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் 684 நாட்களைக் கடந்த நிலையில் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள்.

இன்று முள்ளியவளைக்கு வருகைதரவுள்ள ஜனாதிபதியின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள். (ஐ)

## பரபரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்ட குழுவின் அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமை சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது என பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

சபாநாயகரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அந்த அறிக்கை சபாநாயகர் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

இந்த அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட வேண்டிய சட்டநடவடிக்கை குறித்தும் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் மீதும் குறித்த அறிக்கையில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பில் விசாரணை செய்வதற்கு, பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறியின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையே கையளிக்கப்படவுள்ளது. (ஐ)

## சிறுபான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஒன்றுகூடியவர்கள் பேரணியாக யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக மக்களின் உரிமைகளைப் பறிக்காதே', 'நாட்டு மக்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்காதே', 'சிறுபான்மையினரை இலக்கும் வைக்கும் பொறியே பயங்கரவாதச் சட்டம், பயங்கரவாதச்சட்டம்–வேண்டாம்', 'மக்களின் பிரதிநிதிகளே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றி மக்களிடம் கேளுங்கள்' போன்ற வாசகங்களை மும்மொழிகளிலும் எழுதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் ஏந்தியிருந்தார்கள். (ஐ–07)

## விக்னேஸ்வரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிழமை முற்பகல் 10 மணிக்குச் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இன்றைய கூட்டத்தில் முக்கியமாக கட்சியின் யாப்பு தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டு அவசியமான திருத்தங்களுடன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கட்சியின் மத்திய குழுவுக்கு 21 பேர் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. மேலும் சில நியமனங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஒவ்வொருவரும் தமக்கு அளிக்கப்பட்ட கடமைகள் பொறுப்புக்களைத் தாமதம் எதுவும் இன்றி ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் விவரம் வருமாறு:

ஸ்தாகரும் செயலாளர் நாயகமும் – நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

பொருளாளரும் உப செயலாளர் பொருளாதார விவகாரங்களும் – பேராசிரியர் வி.பி.சிவநாதன்

உப செயலாளர் கொள்கை பரப்பு – க.அருந்தவபாலன்

இணை உப செயலாளர் நிர்வாகம் – எஸ்.சோமசுந்தரம்

இணை உப செயலாளர் நிர்வாகம் – ஆ.ஆலாலசுந்தரம்

உபசெயலாளர் மகளிர் அணி – திருமதி இளவேந்தி நிர்மலராஜ்

உப செயலாளர் இளைஞர் விவகாரங்கள் – கலாநிதி என். கார்த்திகேயன்

உப செயலாளர் ஊடகமும் செயற்றிட்ட ஆக்கமும் – தவச்செல்வம் சிற்பரன்

உப செயலாளர் சமூக பாதுகாப்பு – எந்திரி தி.கெங்காதரன்

உப செயலாளர் கலை கலாச்சாரம் பாரம்பரியம் – தம்பு சிவசுப்பிரமணியம்

இளைஞர் அணி இணைப்பாளர் – கே.கிருஸ்ணமீனன்

இளைஞர் அணி தொகுதி பொறுப்பாளர் – வி.அமல்

தொகுதி அமைப்பாளர் – செல்லத்தம்பி சிறிதரன்

தொகுதி அமைப்பாளர் – அந்தோனி கபிரியேல்

தொகுதி அமைப்பாளர் – அன்னலிங்கம் அன்னராசா

தொகுதி அமைப்பாளர் – சிவசுப்பிரமணியம் நந்தகுமார்

தொகுதி அமைப்பாளர் – இரா. மயூதரன்

தொகுதி அமைப்பாளர் – அ.அன்புராஜ்

மகளிர் அணி இணைப்பாளர் – செல்வி.புஸ்பராசா சுமிதா

தொகுதி அமைப்பாளர் – வி.ஞானமூர்த்தி

தொகுதி அமைப்பாளர் – ராஜா துரைசிங்கம். (ஐ–07)

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாடசாலை வாரம் இன்று முதல் 28ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று முற்பகல் 9.00 மணிக்கு முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுடன் இணைந்ததாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் தமது காலைக் கூட்டத்தின்போது போதைப்பொருள் ஒழிப்பு பற்றிய உறுதிமொழியை மேற்கொள்ளவுள்ளனர்.

தேசிய போதைப்பொருள் ஒழிப்புப் பாடசாலை வாரத்தின் முதல் நாளான இன்று போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் மாணவர்களை தெளிவுபடுத்தும் வகுப்பறைச் செயலமர்வுகளும் நாளை செவ்வாய்க்கிழமை பெற்றோர்களைப் பாடசாலைக்கு வரவழைத்து வகுப்பறைகளில் மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டங்களும், எதிர்வரும் 23ஆம் திகதி போதைப் பொருள் தொடர்பான சட்ட வரையறைகள் தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் அரசியல் பிரதிநிதிகளைத் தெளிவுபடுத்தும் நிகழ்வும், எதிர்வரும் 25ஆம் திகதி ஊடகங்களின் வாயிலாகப் பாடசாலைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான செய்திகளை கொண்டு செல்வதற்கு ஊடகவியலாளர்களைத் தெளிவுபடுத்தும் நிகழ்வும், எதிர்வரும் 26ஆம் திகதி தனியார் தொண்டு நிறுவனங்களின் பங்குபற்றலில் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டங்களும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஜனவரி மாதம் 27ஆம் திகதி சமயஸ்தாபனங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளில் போதைப்பொருள் ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக அறிமுகப்படுத்திய 1984 கட்டணமற்ற தொலைபேசி எண்ணை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தும் நிகழ்வும் இந்த விழாவின் போது ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 11 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான அடிப்படை செலவுக்கான நிதி வழங்கும் நிகழ்வு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுத்தமான குடிதண்ணீர் வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிதியை வழங்கும் நிகழ்வு உள்ளிட்ட பல நிகழ்வுகள் இதன் போது இடம்பெறவுள்ளன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மூலம் அகழி வெட்டியபோது மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியிலேயே இந்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை பலவருடங்கள் பழமை வாய்ந்த குண்டுகளாக உள்ளன.

இது தொடர்பாக அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து புலனாய்வாளர்கள் சம்பவ இடத்துக்கு வந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ–07)

# இந்தியாவிலுள்ள ஈழத்தமிழ் அகதிகள் அரசியல் நோக்கத்துக்காக தடுப்பு

## தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு



புதுடில்லி,ஜன.21

இந்தியாவில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் மீளவும் இலங்கைக்கு வர வேண்டும் என விரும்புகிறார்கள் எனவும் எனினும், அரசியல் நோக்கத்துக்காக அவர்களை இந்தியாவிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற முயற்சிகள் நடக்கின்றன எனவும் இந்தியாவுக்கான இலங்கைதூதுவர் ஒஸ்டின் பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள ஒரு இலட்சம் அகதிகளில் 20 முதல் 30 வீதமானோர் இந்தியாவிலேயே வசிக்க விரும்புகின்றனர் எனக்கூறியுள்ள ஒஸ்டின் பெர் னாண்டோ விரைவில் முகாம்களில் உள்ள அகதிகளை சந்திக்கவிருக்கிறார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கத்தில் பத்திரிகையாளர்களுடன் பேசிய ஒஸ்டின் பெர்னாண்டோ, சுமார் 5,000 அகதிகள் இலங்கைக்கு திரும்பியுள்ளனர், இப்போது அகதிகள் அனைவரும் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டும் என விரும்புகிறோம், எனக் கூறியிருக்கிறார்.

அம்மக்களைதிரும்பபெற்றுக்கொள்ள இலங்கை அரசு ஏதேனும் கால அளவை நிர்ணயித்துள்ளதா என்ற கேள்விக்கு, அது போன்ற எந்த கால அளவும் கிடையாது எனக் குறிப்பிட்டார்.

அதே சமயம், அகதிகளை கூடிய விரைவில் திரும்பப் பெற்றுக்கொள்வோம் என்றும் இந்தியா மற்றும் இலங்கை இடையே அகதிகள் திரும்புவது தொடர்பான பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1980களில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்தும் போரின் காரணமாகவும் சுமார் 3 லட்சம் ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்தனர். அதில் சுமார் 1 லட்சம் அகதிகள் இன்றும் தமிழ்நாட்டிலேயே வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சாவகச்சேரியில் இளைஞன் 6 கிலோ கஞ்சாவுடன் கைது

சாவகச்சேரி,ஜன.21

6 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று (20) அதிகாலை பொதிகள் செய்யப்பட்ட நிலையில் கஞ்சாவை வீதியில் வைத்திருந்த வேளையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் எழுதுமட்டுவாள் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், வேறு நபர் ஒருவருக்கு கஞ்சாவை கைமாற்ற நின்ற போதே பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கைதுசெய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் சாவகச்சேரி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இந்திய மீனவர்களின் 9 படகுகள் விடுவிப்பு

(எஸ்.நிதர்சன்)

யாழ்ப்பாணம், ஜன.21

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒன்பது 9 படகுகளை ராமேஸ்வரத்திலிருந்து வந்த மீனவர்கள் குழு நேற்று காலை மீட்டுச் சென்றுள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்ததான குற்றச்சாட்டில் கடந்த 2014 ஜுன் முதல் 2018 ஒகஸ்ட் மாதம் வரையிலான நான்கு ஆண்டுகளில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாகை, தஞ்சை, மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 183 படகுகள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க தமிழகத்தில் மீனவ அமைப்புகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கோரிக்கையை ஏற்று இலங்கை அரசு படகுகளை விடுவிக்க நீதிமன்றங்களுக்கு பரிந்துரை செய்தது. இதனைத் தொடர்ந்து கடந்த 2018 ஒக்டோபர் இறுதியில் இந்திய படகுகளை விடுவிக்க நீதிமன்றங்கள் உத்தரவிட்டன.

இதனை தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் கொண்ட குழு இலங்கை சென்று விடுவிக்கப்பட்ட படகுகளை பார்வையிட்டதில் 50க்கும் குறைவான படகுகள் மட்டுமே பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதாக அதிர்ச்சி தகவலை இந்திய அரசுக்கு சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து 9 படகுகளில் மீன்பிடி தொழிலாளர்கள், படகு உரிமையாளர்கள், இயந்திரம் மற்றும், படகு பழுது பார்ப்பவர்கள் உள்ளிட்ட 71 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் காரைநகரை வந்தடைந்தனர்.

. நேற்று காரைநகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒன்பது படகுகளை ஒரே நாளில் மீட்டனர். மீட்புக்குழுவினர் கூறும் போது படகுகளை மீட்க மூன்று நாள்களுக்கு மேல் ஆகும் என நினைத்து அனுமதி பெற்று இங்கு வந்தோம். ஆனால் இங்கு காற்றின் வேகம் குறைந்து கடல் சீற்றம் இல்லாமல் படகுகளை மீட்க சாதகமான சூழல் இருந்தபடியால் இலங்கை கடற்படையினர் மிகவும் உதவிகரமாக இருந்தபடியால் ஒரே நாளில் ஒன்பது படகுகளையும் மீட்டுவிட்டோம் தாங்கள் மீட்கப்பட்ட படகுகளுடன் வரும் 20ஆம் திகதி ராமேஸ்வரம் புறப்படவுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர். (எ)

## ஔவையார் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



வவுனியா,ஜன.21

வவுனியா சின்னப்புதுக்குளம், மாமடுவ வீதி சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஔவையாரின் நினைவுப் பேருரையை வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி நிறைமதி நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து வருகை தந்த பிரதிநிதிகள் ஔவையாரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து பூதூவி நினைவு தினத்தை அனுஷ்டித்தனர்.

இந்நிகழ்வில் நகரசபை உப நகரபிதா சு. குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், சு.காகண்டீபன், சமந்த செபநேசராணி, பாஸ்கரன் ஜெயவதனி, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சுந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், சமூக ஆர்வலர் விக்னா, நகரசபை ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ.தே.கவுக்கு தாவுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை

### ஜனாதிபதியிடம் கோருகிறார் மகிந்தானந்த

கொழும்பு,ஜன.21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய முயற்சித்து வருவதாகவும், அவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறும் நபர்களுக்கு எதிராக ஜனாதிபதி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் விலை போன ஒரு அணியே இவ்வாறு செயற்பட்டு வருகின்றது. கடந்த நல்லாட்சியில் அமைச்சுக்களை வைத்து கொண்டு சுகபோக வாழ்க்கையை அனுபவித்த ஓர் அணியே இவ்வாறு செயற்பட்டு வருகின்றது. இவர்களுக்கு அமைச்சு பதவி இல்லாது, சலுகைகள் இல்லாது வாழ முடியாது உள்ளது.

ஆகவே தான் இவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் அணியில் இணைந்துகொள்ள முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களுக்கு சர்வதேச புலம்பெயர் அமைப்புகளின் பணம் கிடைக்கவும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் தலைமைத்துவமும் தெரிந்துகொள்ள வேண்டும். இவர்களின் நோக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்துவதாகும். அதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசிய கட்சி சரியாக முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

## உணவு வகைகளை கைகளால் தொட்டு விற்பனை செய்யத் தடை

அனைத்து வகை உணவுகளையும், கையால் தொட்டு விற்பனை செய்யும் நடவடிக்கைகள், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் தடை செய்யப்படுவதாக, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையை மீறிச் செயற்படும் உணவக மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, மக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும், சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு இது தொடர்பிலான தெளிவூட்டல் வழிகாட்டல் அறிக்கைகள், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.